விலை ரூபா: 8.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 தை 04 திங்கட்கிழமை (17.01.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 29

கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## அமெ. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இன்று இலங்கைக்கு வருகிறார்

(கொழும்பு)

அமெரிக்கப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் போல்வூல் வன்சிங் குறுகியகால விஜயமொன்றை மேற்கொண்டு இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இவருடன் பசுபிக் பிராந்தியத்துக்கான அமெரிக்கக் கடற்படைத் தளபதி அட்மிரல் தோமஸ் தோ தோவும் இலங்கைக்கு வருகின்றனர்.

இலங்கைக்கு வருகைதரும் அமெரிக்கப் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்பகுதியினைப் பார்வையிடுவதோடு அரச உயர்மட்டக் குழுவினரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.


அத்துடன் மீட்பு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுவரும் அமெரிக்க இராணுவத்தினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (த-04)

## சுதந்திரக்கட்சி – ஜே.வி.பி இடையே முறுகல்

(கொழும்பு)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நடவடிக்கைகள் தொடர்பாக ஜே.வி.பிக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

அனர்த்த நிவாரணப் பணிகளில் அரச நிர்வாகம் உரிய முறையில் இயங்கவில்லை என அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி நேரடியாகவே விமர்சித்து வருகின்றது. அதேநேரம் ஜே.வி.பி தன்னை தனியான கட்சியாகக் காட்டிக்கொண்டு நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதாக சுதந்திரக்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. இந்நிலையில் அரசாங்க ஊடகங்களில் ஜே.வி.பியின் பிரசாரங்களை குறைக்குமாறு ஜனாதிபதியால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)



உலக உணவுத் திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜேம்ஸ் மொறிஸ் நேற்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினார். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகள் குறித்து ஜேம்ஸ் மொறிஸ் தமிழ்ச்செல்வனிடம் கேட்டறிந்துகொண்டார்.

# பேச்சென்ற பேச்சுக்கே தற்போது இடமில்லை

## புலித்தேவன் பேட்டி

(நமது நிருபர்)

**தற்போது அரசு - புலிகள் சமாதானப் பேச்சு என்ற பேச்சுக்கே இடமில்லை. கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கான மனிதாபிமான உதவிகளே தற்போதைய அவசர தேவையென தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

படையினர் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்துவரும் தமிழர் புனர்வாழ்வுக்கழக ஊழியர்களை குழப்பியும், மனிதாபிமான மற்ற முறையில் அவர்களுடன் நடந்து

(14 ஆம் பக்கம் பார்க்க)

# அரசு – புலிகள் திட்டம் கூட்டாக ஆராயப்படும்

## ஆசிய அபிவிருத்தி வங்கி இயக்குநர்

(கொழும்பு)

**சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் புனர்நிர்மாண வேலைகளுக்கான நிதியுதவிகள் வழங்குவதற்கு முன்னோடியாக இலங்கை அரசினாலும், தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் கையளிக்கப்பட்டுள்ள புனரமைப்பு மதிப்பீட்டு அறிக்கைகள் கூட்டாக பரிசீலிக்கப்படும் என ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்துள்ளது.**

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இயக்குநர் அஸான்டோ ஸியோ நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நடைபெற்ற சந்திப்பில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் விமான ஓடுபாதையில் சரக்கு விமானம் தரையிறங்கமுடியும்

## இராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சி

விடுதலைப் புலிகள் வன்னியில் முன்னர் அமைத்த விமான ஓடுபாதையைவிட இன்னொரு - புதிய - ஓடுபாதையை தற்போது அமைத்துள்ளார்கள் என்றும், அந்த ஓடுபாதையில் இரண்டு விமானங்கள் தரித்து நின்றதை விமானப்படையின் ஆளில்லா விமானம் படம்பிடித்துள்ளது என்றும் இராணுவ வட்டாரங்களில் கடந்த வாரம் ஒரு அதிர்ச்சித் தகவல் தாக்கியிருக்கிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த புதன்கிழமை வன்னி வான்பரப்புக்கு மேலாகப் பறந்த விமானப்படையின் இஸ்ரேல் தயாரிப்பு ஆளில்லா உளவு விமானம் இரணைமடுக்குளத்துக்கு அண்மையில் புலிகள் புதிய விமான ஓடுபாதையை அமைத்துள்ளதை அவதானித்துள்ளதாக வவுனியாவில் உள்ள விமானத்தின் கட்டளை மையம் இனம் கண்டுள்ளது என்றும்,

சரக்கு ஏற்றி இறக்கும் சி-130 விமானம்கூட இந்த ஓடுபாதையில் எந்தப்பிரச்சினையும் இன்றி தரையிறங்கிச் செல்லக் கூடிய வகையில் இந்த விமான ஓடுபாதை வசதியாக அமைக்கப்பட்டுள்ளது என்றும் - இராணுவத்தினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இந்த விமான ஓடுபாதையில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் கிட்டுவின் நினைவுதினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

(மருதங்கேணி)

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளின் பன்னிரண்டாவது ஆண்டு நினைவுதின நிகழ்வு நேற்று தமிழர் தாயகப் பகுதி எங்கும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை தீருவிலில் உள்ள நினைவு சதுக்கத்தில் நடைபெற்ற பிரதான நிகழ்வில் பொதுச் சுடரினை வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை கடற்புலிகளின் துணைத் தளபதி செழியன் ஏற்றினார்.

விசேடமாகப் பந்தல்கள் அமைக்கப்படாதபோதும் மிகவும் அமைதியான முறையில் உணர்வுபூர்வமாக இந்நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது. தொடர்ந்து ஈகச்சுடர்கள் ஏற்றப்பட்டு 10 வீரவேங்கைகளுக்கும் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வீரவணக்க உரைகளை வடமராட்சி கடற்தொழிலாளர் சங்க முகாமையாளர் சூரியகுமார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசன், யாழ். மாவட்ட மகளிர் அரசியதுறைப் பொறுப்பாளர் கயல்விழி ஆகி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கிட்டு நினைவுநிகழ்வில் படையினர் கண்ணீர் புகைக்குண்டு வீச்சு

(மன்னார்)

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் பன்னிரண்டாம் ஆண்டு நினைவாக மன்னாரில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் படையினர் கண்ணீர்புகைக் குண்டு வீசி அட்டகாசம் புரிந்துள்ளனர்.

மன்னார் பேருந்து தரிப்பு நிலையம், பேசாலை ஆகிய பகுதிகளில் நடைபெற்ற கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 12வது ஆண்டு நினைவு நிகழ்வில் புலிக் கொடி ஏற்றக்கூடாது என படையினர் தெரிவித்ததுடன், மக்கள் நிகழ்வுகளில் பங்கேற்பதைத் தடுக்கும் வகையில் கண்ணீர்ப்புகை குண்டுகளை வெடிக்கச்செய்தனர்.

அத்துடன் மக்களை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட மக்கள் பலவந்தமாக வெளியேற்றம்

### கற்கோவளம் தேவாலயத்தில் அவலம்

(பொலிகண்டி)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்து கற்கோவளம்செபஸ்ரியார் தேவாலயத்தில் தங்கியிருந்த மக்கள் அங்கிருந்து நேற்றுமாலை 4 மணியளவில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

திடீரென நேற்று மாலை தேவாலயத்திற்குச் சென்ற நிர்வாகத்தினர் இன்று திருவிழா ஆரம்பமாவதாகத் தெரிவித்து அங்கிருந்தவர்களின் உடைமைகளைத் தூக்கிவீசி அவர்களை வெளியேற்றியதாகக் கூறப்படுகிறது.

இதனால் அங்கிருந்த

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மோ.சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கொழும்புத்துறை)

வேக்கட்டுப்பாட்டை இழந்த எம்.ரி.90 மோட்டார் சைக்கிள் கல் ஒன்றுடன் மோதியதால் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் புத்தூர் சிறுப்பிட்டியில் இடம்பெற்றது. சம்பவத்தின்போது சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கதிர்காமநாதன் ஆனந்தகுமார் (வயது 30) என்பவரே மரணமானவராவார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச்சென்ற அதேஇடத்தைச் சேர்ந்த

(14 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கனேடியபிரதமர் இலங்கை அரசின் தடைகளை மீறி தமிழர் தாயகப் பகுதிகளுக்கு விஜயம் செய்வாரா?

## கனடா மற்றும் இலங்கை வாழ் தமிழ் மக்கள் ஆதங்கம்

(கொழும்பு)

**இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டிருக்கும் கனேடியப் பிரதமர் போல்மார்டின் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிற்கு விஜயம் செய்வாரா என்பதே தற்போது கனடா விலும், இலங்கையிலும் வாழும் தமிழ் மக்களின் ஆதங்கமாக இருக்கிறது.**

கனடாவில் தற்போது தமிழர்கள் அதிகளவில் புலம்பெயர்ந்து வாழ்வதாலும், கனடாவின் இலங்கை தொடர்பான அக்கறையாலும் பெரிதுபடுத்தப்பட்டுள்ள இவ்விவகாரத்தில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ள கனடியப் பிரதமரின் விஜயம் பெரிய சர்ச்சையைககிளபபியுள்ளது. ஏற்கனவே ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் இலங்கைக்கு விஜயம் செய்த போது தமிழ்ப் பகுதிகளிற்கு விஜயம் செய்யாமல் தடுக்கப்பட்டதும் அதனால் சர்வதேசரீதியில் எழுந்த அபிப்பிராய பேதங்களும் கலைய முன்னதாகவே கனடியப் பிரதமரின் இலங்கை விஜயம் இடம் பெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிற்குள் செல்ல வேண்டாம் என்று இலங்கை அரசு அறிவுறுத்திய பிறகும் கனடியப்பிரதமரின் விஜயத்திற்கான விருப்புக்கள் பல தரப்பாலும் தெரிவிக்கப் பட்டுள்ளன. ஆனால் யதார்த்தம் யாதெனில இராஜதந்திர வரை முறைகளின் பிரகாரம் கனேடியப் பிரதமர் இலங்கை அரசின் எந்தவொரு அறிவுறுத்தல்களையும் பின்பற்ற வேண்டுமேயெனபதாகும்.

குறிப்பாக அந்நாட்டின் அழிவுகளைப்பார்வையிடச் சென்றாலும், அந்நாட்டிற்குள் புகும்போது அந்நாட்டின் விருந்தினர் என்ற அந்தஸ்திலேயே அவரால் அங்கு செல்ல முடியும். எனவே, அந்நாட்டினால் தரப்படும் எந்தவொரு அறிவித்தலையும் பின்பற்ற வேண்டிய கடப்பாடு கனடியப் பிரதமருக்குண்டு.

எனவே அவரால் இலங்கைக்கு அரசின் அறிவுறுத்தலை மீறி தமிழர் பிரதேசங்களிற்குச் செல்ல முடியாது என்பதே யதார்ததமாகும்.இந்த நடைமுறை எந்தவொரு நாட்டிற்கும் சமமானதாகும். இதனொருஅம்சமாகவே பிறநாடுகளிலுள்ள தூதரகங்கள் கூட மேற்படி நாடுகளின் நிலமாகக் கருதப்பட்டு அதற்குள் பிரவேசிப்பது தடைசெய்யப்பட்டுள்ளதும் அடங்கும். அது போலவே, இந்தியாவின் தூதுவராலயம் அமெரிக்காவில் அமைந்திருக்கும் இடம் இந்தியாவின் நிலமாகவே கருதப்படும். இது எந்த நாடுகளிற்கும் பொருந்தும்.எனவே இலங்கை அரசினால் போடப்படும் இத்தடைகள் தமிழர்தரப்பு நிர்வாக செயற்பாடுகள், நிழலரசு போன்றவை பற்றிய புரிந்துணர்வை சர்வதேசத்தில் ஏற்படுத்த உதவுகின்றன என்பதுடன் இலங்கைத்தீவில் இரு நாடுகள் உள்ளன என்பதை உணர்த்தும் ஒரு பாரிய செயற்பாடாகவே அமையவும் பெற்றுள்ளது.

(ப-04)

# பதவி உயர்வுக்கான தகைமைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரசாங்க பொது எழுதுநர் சேவை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிற சேவைகளின் அரசாங்க சிறாப்பர் சேவை அரசாங்க கணக்கு பதியுநர் சேவை அல்லது அரசாங்க பாடசாலைக் காப்பாளர் சேவை அல்லது அரசாங்க தட்டெழுத்தாளர் சேவையின் பிரிவு II 'ஆ' விலுள்ள அலுவலர்களை வகுப்பு II அ" பிரிவுக்கு தரமுயர்த்துவதற்கான தகைமைப் பரீட்சை தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதியில் நடத்தப்படவுள்ளது.

பொது எழுதுநர் சேவை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிற சேவைகளின் பரீட்சைகள் மாவட்ட செயலகங்கள் அமைந்துள்ள அனைத்து நகரங்களிலும் நடத்தப்படுவதுடன் அவ்வாறான ஒரு நிலையத்திற்குபோதியளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து அந்த நிலையம் இரத்து செய்யப்படவுள்ளது.

சிறாப்பர் கணக்குப் பதியுநர், பண்டகசாலைக் காப்பாளர் சேவையின் பரீட்சைகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடாத்தப்படும்.

தட்டெழுத்தாளர் சேவையின் பரீட்சை கொழும்பு, மாத்தறை, பதுளை, இரத்தினபுரி, அநுராத புரம், கண்டி, குருநாகல், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் நடாத்தப்படுவதுடன் போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாத ஏதேனுமொரு நிலையம் இருப்பின் அந்நிலையம் இரத்துச் செய்யப்படும்.

இவ்விடயம் தொடர்பான மேலதிக விபரங்களை 13.01.05 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் பார்வையிடலாம்.

(ற-19)

## விசனம்

(சாவகச்சேரி)

கோப்பாய் இந்துமயானத்தை அண் டிய பகுதிகளில் கழிவுகள் கொட்டப்படுவதால் அப்பகுதி மக்கள் பெரும் சுகாதாரப் பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர்.

மேற்படி மயானப்பகுதியில் முன்னர் கழிவுகள் கொட்டப்பட்டுவந்தாலும் அது நீண்ட காலமாக கைவிடப்பட்டிருந்தது இந்நிலையில் மீண்டும் அப்பகுதியில் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றமை குறித்துமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(ப-79)

## சுனாமியால் பெற்றோரை இழந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு மகாபொல புலமைப் பரிசில்!

(கொழும்பு)

சுனாமிப்பேரலைகளினால் தமது பெற்றோர்களை இழந்த பல்கலைக் கழக மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில்களை பெற்றுக்கொடுப்பது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆராய்ந்து வருகின்றது.

இது தொடர்பான ஆலோசனை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் முன் வைக்கப்பட்டிருப்ப தாகவும் மகாபொல புலமைப்பரிசில் நிதியத்துடன் இது குறித்து பேச்சு வார்த்தை நடாத்த இருப்பதாகவும் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மெண்டிஸ் தெரிவித்தார்.

இதற்கமைய பாதிக்கப்பட்ட மாணவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்(ற-8)

## சுவீடன் பிரதமரின் இல. விஜயம் இரத்து!

(கொழும்பு)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கையை பார்வையிடுவதற்காக திட்டமிட்டிருந்த பயணத்தை சுவீடன் பிரதமர் ஜோரன் பெர்சன் ரத்து செய்துள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

எதிர்வரும் செவ்வாய் மற்றும் புதன் ஆகிய நாட்களில் அவர் இலங்கைக்கு பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார். ஆசிய ஆழிப் பேரலையில் 52 சுவீடன் நாட்டவர் பலியாகி உள்ளனர். 893 பேரை காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

## அரச படைகள் தமிழர் போராட்டத்தை கொச்சைப்படுத்துவதை ஏற்கமுடியாது

### மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் விசனம்

(கொழும்பு)

இராணுவமும், இலங்கை அரசும் தமிழீழ விடுத்லைப்புலிகளை கொச்சைப்படுத்த வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக சிறுவர்களை படையில் சேர்க்கின்றனர் என்று கூறி தமிழீழ விடுதலைப் புலிகளையும்தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் கொச்சைப்படுத்து கின்றனர்.



இவ்வாறு அம்பாறை தம்பிலுவில் அரசியல்துறை காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற யுனிசெப் பிரதிநிதிகளுடனான ஒன்று கூடலில் கலந்து கொண்ட தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தனதுரையில் குறிப்பிடுகையில்,

தமிழீழ விடுதலைப்புலிகள் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான துயர்துடைப்புப் பணிகளை மேற்கொண்டிருந்த வேளையில் இவ்வாறான குற்றச்சாட்டு எம்மீது சுமத்தப்பட்டுள்ளதை நாம் முற்றாக மறுக்கின்றோம்.

தமிழீழ விடுதலைப்புலிகளை பொறுத்த மட்டில் நாங்கள் தற்போது 18 வயதுக் குட்பட்ட சிறுவர்களை எமது அமைப்பில் சேர்ப்பதில்லை என்பதில் நாங்களும் எமது தலைமைப்பீடமும் உள்ளது என்றார்.

இச்சந்திப்பில் போர் நிறுத்தக்கண் காணிப் புக்குழு மற்றும் யுனிசெப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

(ப)

### கடற்படையினரது பாவனையில் மட்டுமுள்ள

## யாழ்.குடாநாட்டு துறைமுகங்களை அமெரிக்க படைகள் புனரமைக்கும்

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடற்கொந்தளிப்பினால் பெரும் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதும், யாழ்.குடாநாட்டில் இருபெரும் துறைமுகங்களான பாவனையிலுள்ளதுமான காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை துறைமுகங்களை உடன் புனரமைக்க அமெரிக்க அரசு முன்வந்துள்ளது.

பாதிக்கப்பட்ட இவ்விரு இறங்குதுறைகளையும் பார்வையிட அமெரிக்க இராணுவ பொறியியல் பிரிவின் உயரதிகாரிகள் குழுவொன்று கடந்த வியாழக்கிழமை குடாநாட்டிற்குவிஜயம் செய்திருந்ததாகவும் தெரியவருகின்றது.

தமது நாட்டு விசேட கடற்படை கப்பலில் இலங்கைக் கடற்படையின் ரோந்துப் படகுகள் பாதுகாப்பு வழங்க இக் குழுவினர் காங்கேசன்துறை வந்திருந்ததாகவும் தொடர்புடைய வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.இதே வேளை இவ் இராணுவ பொறியியல் நிபுணர் குழுவும் யாழ். மாவட்ட படைத்தலைமையினைச் சேர்ந்த சில அதிகாரிகளும் பலாலியிலிருந்து வாகனத் தொடரணி மூலம் பருத்தித்துறை இறங்கு துறையினை நேரடியாக வந்து பார்வையிட்டிருந்ததாக அங்கு பணியாற்றும் துறைமுக அதிகார சபையின் அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

ஆயினும் இந்நிபுணர்கள் குழு எந்த நாட்டினைச் சேர்ந்தவர்கள் என்பதை தாம் அறிந்திருக்கவில்லை எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

இவ் இறங்குதுறையை உட னடியாக புனரமைத்து தமது பயன் பாட்டிற்கு எடுத்துக்கொள்வதில் யாழ். மாவட்ட படைத் தலைமை கூடிய கவனமெடுத்துவருகின் றமை குறிப்பிடத்தக்க.


(ப)

# கர்நாடகாவில் பஸ் விபத்து
# 57பேர் பலி; 11பேர் படுகாயம்

(பெங்களூர்)

பஸ் கால்வாயில் விழுந்து மூழ்கியதில் 18 பெண்கள் உட்பட 57 பேர் பலியாகியுள்ளனர்.

கர்நாடக மாநிலம் பிஜாப்பூர் மாவட்டம் ஹுப்பிளியிலிருந்து கர்நாடக அரசு



பஸ் குல்பர்கா மாவட்டம் சித்தாப்பூர் என்ற இடத்திற்கு நேற்றுமுன்தினம் இரவு புறப்பட்டுச் சென்றது. இந்த பஸ்ஸில் 67 பயணிகள் பயணம் செய்தனர். பஸ்ஸிலிருந்த அனைவரும் தூங்கிக்கொண்டிருந்தனர்.

அதிகாலை பஸ் நெடுகுத்தி என்ற இடத்தினருகே வந்துகொண்டிருந்தது. அப்போது பஸ் எதிர்பாராதவிதமாக திடீரென நிலை தடுமாறித் தனது கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள அலமாட்டியணையின் வலதுகரைக் கால்வாயில் விழுந்தது.

இக்கால்வாய் 15 அடி ஆழம் உள்ளது. கால்வாயில் விழுந்த பஸ் முழுவதும் மூழ்கி நீரினால் இழுத்துச் செல்லப்பட்டது. கால்வாயில் 3500அடி தண்ணீர் சென்று கொண்டிருந்தது. இதனால் பஸ்ஸிலிருந்தவர்களில் 57 பேர் பரிதாபமாகப் பலியாகினர். 10பேர் மட்டுமே நீந்திக் கரை சேர்ந்தனர்.

இதுகுறித்துத் தகவல் அறிந்த பொலிஸார் மற்றம் அதிகாரிகள் விரைந்து சென்றனர். 4 கிரேன்கள் வரவழைக்கப்பட்டுக் கால்வாயிலிருந்து பஸ்ஸைத் தூக்கினர். அப் போது பஸ் ஜன்னல்களில் உடல்கள் தொங்கிக்கொண்டிருந்தன.

கால்வாயிலிருந்து பிணங்கள் மீட்கப்பட்டன. இதில் 18 பெண்கள், 2 குழந்தைகள் உட்பட 57பேர் பலியாகியுள்ளனர்.

பயணிகளில் பெரும்பாலானவர்கள் சித்தாப்பூர் பகுதியைச் சேர்ந்தவர்கள். சம்பவ இடத்திற்கு முதல்வர் தரங்சிங், மாநிலப் போக்குவரத்துறை மந்திரி கார்கே ஆகியோர் ஹெலிகொப்டர் மூலம் விரைந்து சென்றனர். இறந்தவர்களது குடும்பத்திற்குத் தலா ரூபா 2இலட்சம் வழங்கப்படுமென கர்நாடகப் போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது.


காயத்துடன் மீட்கப்பட்ட 11பேரும் பிஜாப்பூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களது சிகிச்சைக்கான செலவைக் கர்நாடகப் போக்குவரத்துக் கழகமே ஏற்றுக்கொள்கிறது.

இந்த விபத்துக் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்படும் என்றும், எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துக்கள் நிகழாமல் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென மந்திரி கார்கே கூறினார்.

பஸ் தனது கட்டுப்பாட்டை இழந்ததால் இந்த விபத்து நடந்ததாகத் தெரிகிறது. (ப)

# செல்போன் ரோபோ

ஜப்பானைச் சேர்ந்த ஒரு நிறுவனம் உலகில் முதன்முறையாக செல்போன் மூலம் இயங்கும் அதிநவீன ரோபோவை வடிவமைத்துள்ளது.



இந்த ரோபோ மனிதனைப் போன்று நடக்கிறது. துள்ளிக்குதிக்கிறது. செல்போனில் இருந்து பிறப்பிக்கப்படும் அனைத்து உத்தரவுகளுக்கும் ஏற்ப ரோபோ செயற்படுகிறது.

இந்த ரோபோ அடுத்த மாதம் சந்தையில் விற்பனைக்கு வருகிறது. இதன் விலை 50 ஆயிரம் ரூபாவாகும். (ப)

# சுனாமி நிவாரண பணிகளுக்காக
# கருணாநிதி 21 லட்ச ரூபாவழங்கினார்

(சென்னை)

சுனாமி பாதித்தோர் நிவாரணத்துக்காகத் தமிழக முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு 21 லட்ச ரூபா கருணாநிதி வழங்கியதற்கு முதல்வர் ஜெயலலிதா நன்றி தெரிவித்துள்ளார்.

'கண்ணம்மா', 'மண்ணின் மைந்தன்' ஆகிய படங்களுக்குத் திரைக்கதை, வசனம் எழுதியதற்கான ஊதியத்தை சுனாமி பாதித்தோர் நிவாரணத்துக்காக தமிழக முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு வழங்குவேன் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி சில தினங்களுக்கு முன் அறிவித்திருந்தார் அல்லவா?



அதன்படி தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் மு.க.ஸ்டாலின் சுனாமி நிவாரண நிதி வழங்குவதற்காக வரிசையில் நின்றிருந்தவர்களோடு வந்துநின்றார். வரிசையில்சென்று முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்தார்.

தி.மு.க.தலைவர் கருணாநிதியின் சார்பில் 'கண்ணம்மா','மண்ணின் மைந்தர்' ஆகிய படவசன ஊதியம் 21 இலட்சத்துக்கான காசோலையை சுனாமி நிவாரண நிதிக்கு வழங்கினார்.

ஜெயலலிதாவைச் சந்தித்துவிட்டு வெளியே வந்த பின்னர் மு.க.ஸ்டாலின் நிருபர்களிடம் கூறியதாவது,

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிடும்வகையில் தி.மு.க. தலைவர் கலைஞர், சோனியாகாந்தி சென்னை வந்தபோது 1 கோடிக்கான காசோலை வழங்கினார்.

அதேபோல தி.மு.க. சார்பில் திரட்டப்பட்ட ரூ.20 இலட்சத்தைப் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட வந்த பிரதமரிடம் வழங்கினார்.

ஏற்கனவே தலைவர் அறிவித்தது போல 'மண்ணின் மைந்தன்', 'கண்ணம்மா' ஆகிய திரைப்படங்களின் திரைக்கதை, வசனம் எழுதிய ஊதியம் ரூ.20 இலட்சத்தைப் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட வந்த பிரதமரிடம் வழங்கினார்.

ஏற்கனவே தலைவர் அறிவித்தது போல 'மண்ணின் மைந்தன்', 'கண்ணம்மா' ஆகிய திரைப்படங்களின் திரைக்கதை, வசனம் எழுதிய ஊதியம் ரூ21 இலட்சத்துக்கான காசோலையைச் சுனாமி நிவாரண நிதிக்காக முதலமைச்சரிடம் வழங்கினேன்.

தலைவர் கலைஞரின் மகனாக வந்து இந்தக் காசோலையை வழங்கினேன். காலதாமதத்துக்குக் காரணம் இந்த 2 படத்துக்கான ஊதியத்தைக் கடந்த 2 நாட்களுக்கு முன்புதான் காசோலையாக கொடுத்தார்கள். அன்று முதலமைச்சரைச் சந்திக்க நேரம் கேட்டோம். அவர் 10 ஆம் திகதி காலை 11 மணிக்கு சந்திக்க நேரம் கொடுத்தார்.

அதன்படி தலைவர் கலைஞர் கொடுத்த காசோலையை முதலமைச்சரிடம் வழங்கினேன் என்றார். (ப)

## WORLD NEWS உலக தரிசனம்

# பனியில் பாதைதேடும் மனிதன்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் டேன்டெர்ரி நகரில் கடும் பனிப்பொழிவு காணப்படுகிறது.

அந்நகரில் சுமார் 5 அடி உயரத்திற்குப் பனி உறைந்துகிடக்கிறது. இதனால் எங்கு பார்த்தாலும் வெள்ளை வெளேர் என்று வெண்மைமயமாகக் காட்சியளிக்கிறது.

முக்கிய நெடுஞ்சாலைகள் பனியால் மூடப்பட்டுப் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

படத்தில் ஒரு மனிதர் பனி மூடியதன் வீட்டின் பாதையை மிஷின் மூலம் சரிசெய்வதைக் காணலாம். (ப)



# உலகில் மிக நீளமான சுருட்டு

போர்டோரிகோவைச் சேர்ந்த சுருட்டு தயாரிக்கும் தொழிலாளி பேட்ரிசியோ பெனா என்பவர் 62 அடி நீளத்தில் உலகின் மிக நீளமான சுருட்டைத் தயாரித்துள்ளார்.



போர்டோரிகோவைச் சேர்ந்த சுருட்டு தயாரிக்கும் தொழிலாளி பேட்ரிசியோ பெனா (வயது 43). இவர் 62 அடி நீளத்தில் உலகின் மிக நீளமான சுருட்டைத் தயாரித்துள்ளார்.

இந்த சுருட்டு 20 பவுண்டு. புகையிலை, 100 இலைகள் ஆகியவை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கான தயாரிப்பு செலவு 2இலட்சம் ரூபா ஆகும். ஆனால் இந்தச் சுருட்டை விலைக்கு விற்கப் போவதில்லை என்று பேட்ரிசியோ அறிவித்துள்ளார்.

படத்தில் சாதனைச் சுருட்டுடன் பேட்ரிசியோ காட்சியளிப்பதைக் காணலாம். (ப)



பொங்கல் விழாவை முன்னிட்டு மதுரை அருகேயுள்ள பாலமேட்டில் நேற்று ஜல்லிக்கட்டு நடந்தது. மாடு ஒன்று வீரர் ஒருவரை கொம்பிற்கு நடுவில் வைத்து சுழற்றுவதைப் படத்தில் காணலாம்.

# கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு மாணவர்களின் பாடத் தெரிவிற்கான அடிப்படைகள் பற்றிய நோக்கு

பேராசிரியர்
வி.பி.சிவநாதன்

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் தத்தம் சுயவிருப்பின அடிப்படையில் பாடங்களைத் தெரிவு செய்யவும், நல்ல அடைவு மட்டத்தை இலக்காகக்கொண்டு செயறபடவும் வாய்ப்புண்டு.

பலகலைக்கழக மாணவரின வயது எவ்வாறாயினும் 18 வயதிற்கு மேற்பட்டதாகவே உள்ளது. கட்டிளமைப் பருவததினராகிய இவர்களிடம் வயதிற்கேற்ற துடிப்பும, சுதந்திர செயற்பாட்டுத்தன்மையும ஒருங்கே சேர்ந்திருக்கும். வயது வந்த மாணவப் பருவத்தில் பாடங்களைத் தெரிவு செய்து அதில் நல்ல அடைவுமட்டத்தை அடைந்துகொள்ள வாய்ப்பு இருப்பதனை நாம் அறிவோம்.

**பாடங்களைத் தெரிவதற்கான சூழல்**

குறைவிருத்தி நாடுகளில் ஒன்றான இலங்கையில் சுயமாகத் தீர்மானம் எடுக்கும் வயதினையுடைய மாணவர்கள் சுதந்திரமாகவும், தற்துணிவுடனும் செயற்பட வாய்ப்பு இருந்தபோதும், சூழலால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களாக காணபபடுகின்றனா. பாடங்களைத் தெரிவதில் மாணவர்களுக்குப் பின்னணியிலுள்ள சூழல் காரணிகளைப் பின்வருமாறு வரையறுத்துக் கூறமுடியும்.

ஒவ்வொரு மாணவனும் தனது எதிர்கால வாழ்வு கௌரவத்துடனும் நல்ல பொருளாதார வளத்துடனும் இருக்க வேண்டும் என்னும் தொலை நோக்கோடு செயற்படுவர். அதாவது எதிர்கால நல்வாழ்வு என்ற காரணியை நோக்காகக் கொண்டு செயறபடுவர். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறுதல் என்பதே மாணவருகக முதல் நோக்கமாக இருககும். எனவே அதிக புள்ளியைப் பெற்றுத்தரக்கூடிய பாடங்களைத் தெரிவுசெய்தல் என்பதே பல காரணிகளால் தீர்மானிக்கப்பட்ட ஒன்றாக இருக்கும். அதாவது,

அ) முன்னைய காலங்களில் மாணவர் எடுத்த பாடத்தைத் தெரிவுசெய்து, அதிக புள்ளியைப் பெற்றனர் என்ற புள்ளி விபரங்களைக் கொண்டு தீர்மானமெடுத்தல்.

ஆ)அதிக புள்ளிகளைப் பெற்றுத்தரக் கூடிய பரீட்சை முறையும் பாடப்பரப்பும எந்தப் பாடத்தில் சாதகமாக உள்ளது என்பதை ஒப்புநோக்கித் தீர்மானமெடுத்தல்.

இ)எந்தப் பாடத்தை எடுப்பது என்பதை மாணவர்கள் தாம் வரிசைப்படுத்தினாலும், அதிக புள்ளியைப் பெற்றுத்தரக் கூடிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் கிடைப்பு நிலையும், படிக்க வாய்ப்புக் கிடைக்கும். ஆசிரியர் மாணவரிடையேயான இடைவினைத் தொடர்பும் அதிக புள்ளியைப் பெறக்கூடிய பாடம் என்ற நம்பிக்கையிலான பாடத் தெரிவிற்கு இடமளிக்கும்.

ஈ)தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களின் வினைத்திறன, பரீட்சை அனுபவம், நீண்டகால கற்பித்தல் அனுபவம், தெளிவாகப் பாடத்தை விளங்கவைக்கும் ஆற்றல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பாடசாலையில் குறிப்பிட்ட அந்தப் பாடத்தைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் இல்லாதவிடத்தும் அதிக புள்ளி பெற்றுத்தரக் கூடிய குறிப்பிட்ட பாடத்தைக் கற்கலாம் என்ற நம்பிக்கையில் அப்பாடத்தைத் தெரிவுசெய்யத் தீர்மானிக்கும் சந்தர்ப்பமும் உண்டு.

உ)தெரிந்தவர்கள், நண்பர்கள், அயலவர்களின் உதவியும் ஒத்தாசையும் அதிக புள்ளியைப் பெற்க்கூடிய பாடங்களைத் தெரிவுசெய்வதில் துணைநிற்கின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. அதாவது அயலவர், நண்பர்களின் முன்னைய கால பரீட்சை அனுபவங்களும், முன்னைய பரீட்சைக்காகத் தயாாபடுத்திய குறிப்புகள், வினாவிடைக் கட்டுரைகள கைவசமிருப்பதால் அதனைப் பயன்படுத்தி அதிக புள்ளிகளைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையுடன் பாடங்களைத் தெரிவுசெய்யும் சந்தர்ப்பமும் உண்டு.

ஊ)குடும்ப. அங்கத்தவர் ஒருவர் முன்னா படித்த குறிப்புக் கொப்பிகள், கடந்த கால பரீட்சை வினாவிடைகள, புத்தகங்கள கைவசமிருப்பதால் அதைப் பயன்படுத்திக்கூடிய புள்ளிகள் பெறக்கூடிய பாடங்கள் இவையெனத் தெரிவுசெய்தலுமுண்டு.

எ)குடும்ப அங்கத்தவர்களில் ஒருவரிடம் கேட்டுப் படிக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதால் கூடிய புள்ளியைப் பெறக கூடிய பாடம் இது எனத் தெரிவுசெய்தல்.

ஏ)எவரது உதவியும் கிடைக்கமுடியாத சூழ்நிலையில், தானே பாடம் தொடர்பான பிரசுரஙகளைப் படித்து அதிக புள்ளியைப் பெறமுடியும் என்ற தற்துணிவில பாடத் தெரிவு சம்பநதமான தீர்மானமெடுத்தல் போன்ற இன்னோரன்ன காரணஙகளால் பாடங்களைத் தெரிவுசெய்வர்.

ஐ)வரையறுக்கப்பட்ட கற்கை நெறிக்கான நிபந்தனையூடான பாடத்தெரிவு.

குறிப்பாக பொறியியல், மருத்துவம், மிருகவைத்தியம், பல்வைத்தியம், விவசாயம், கணனி போன்ற கற்கைநெறிககான பாடத்தெரிவாகக் கணிதம், பௌதிகம், இரசாயனம், உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களைத் தெரிவுசெய்தல் அவ்விதமே வணிகக கற்கைநெறிக்கான பாடத்தெரிவும் இடம்பெறுகிறது.

**அதிக மாணவர்களை உள்வாங்கும பல்கலைக்கழக அனுமதி முறைகளும் பாடத்தெரிவும்**

போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளியைப் பெறறு பல்கலைக்கழக அனுமதியைப் பெறவிரும்புவதோடு கூடியபுள்ளியைப் பெறத்தவறும் சந்தர்ப்பத்தில் பல்கலைக்கழக அனுமதியைப் பெறப் பல்கலைக்கழகம் அனுமதி வழங்க வசதியாக இருககும் கற்கைநெறிகளுக்கேற்ப பாடங்களைத் தெரிவுசெய்தலும் உண்டு. உதாரணமாகப் பல்கலைக்கழகம் தன்னிடமுள்ள வசதியை முழு அளவில பயன்படுததுவதற்குத் தேவையான மாணவர் அனுமதி அளவைச் சுட்டிக்காட்டி இப்பாடத்தினை விசேட பாடமாகக்கொண்டு மாணவர்களை அனுமதிக்கும்படி பல்கலைககழக மானிய ஆனைக் குழுவினைக் கோரமுடியும்.

அவ்வாறு கோரும் பாடங்களாக பௌததநாகரிகம், இந்துநாகரிகம், இந்து சமயம், இஸ்லாமிய நாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம போனற பாடங்கள விளங்குகின்றன. மேற்கூறிய பாடங்களைப் படிப்பதற்காக மாணவர்களை அனுமதிக்குக் கோரும்பட்சததில பாடசாலையில உயாதர வகுப்பில பல்கலைக்கழக அனுமதிககாகத் தெரிவுசெய்த மாணவர்களின் வெட்டுப்புள்ளியைக் காட்டிலும், குறிப்பிட்ட அப்பாடததைத் தெரிவுசெய்த. மாணவரின் புள்ளி குறைவாக இருந்தாலும், அப்பாடத்தைத் தெரிவுசெய்தமைககாக அனுமதிக்கப்படுவர். பல்கலைக்கழகத்தில அனுமதிபெற இம்முறையினை சாதகமாகக் கருதும் மாணவாகள் உயர்தர வகுப்பில் விசேட அனுமதிக்குமான பாடங்களையும் தெரிவுசெய்கின்றனர். விசேட அனுமதிக்கான பாடங்களைக கற்கும் மாணவர்கள் பல்கலைக்கழகக் கலவி முடியும்வரை அப்பாடத்தை விசேடமாகவோ அல்லது பொதுக் கலைப்பாடத் தெரிவிலோ கைக்கொள்ளுதல் என்ற நிபந்தனைக் கேற்ப பல்கலைக்கழகததில் பாடத்தைத் தெரிவுசெய்வர்.

இங்கு பல்கலைக்கழகப் பாடத் தெரிவில் சுயவிருப்புடனான தெரிவிற்கு வாய்ப்பளிக்கப்படுவதில்லை. விசேட அனுமதிக்காகப் படித்தபாடங்களையே கட்டாயம் பலகலைக்கழகத்தில படிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கேற்ப பாடங் களைத் தெரிவுசெய்வர். அவ்வாறு விசட அனுமதிக்கான பாடநெறிகளாகத் தமிழ், இந்துநாகரிகம, மெய்யியல், வரலாறு, புவியியல், கிறிஸ்தவ நாகரிகம், நாடகமும் அரங்கியலும் பேரன்ற பாடங்கள் இன்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விசேட அனுமதிப் பாடங்களாக உள்ளன.

**அழகியல் கற்கைநெறிகளான தனிப்பட்ட தெரிவும் மாணவர் அனுமதியும**

போட்டிப்பரீட்சையில் அதிக புள்ளியைப் பெற்றுப் பல்கலைக்கழக அனுமதி பெறவேண்டும் என்ற சூழ்நிலையில் போட்டித்தன்மை குறைந்த ஆனால் அனுமதிக்கான வாய்ப்புக்கள விசேடமாக உள்ள பாடங்களைத தெரிவு செய்து பல்கலைக்கழக அனுமதியைப் பெற்று அப்பாடத்தில் பட்டம்பெற வாய்ப்புண்டு எனக் கருதும் மாணவர்கள் அப்பாடங்களையும் தம் தெரிவில் உட்சேர்த்துக்கொள்வர். உதாரணமாக உயாதர வகுப்பில் தெரிவுசெய்யும் பாடங்களில் ஒன்றாகச் சித்திரம் அல்லது கர்நாடக சங்கீதம் அல்லது நடனம் அல்லது கர்நாடக இசைக் கருவியைப் பயன்படுத்தும் ஆற்றல் உள்ள மிருதங்கம், வயலின், வீணை போன்ற பாடங்களைச் சேர்த்துக்கொள்வர்.

அதிக போட்டி அதிக புள்ளி என்ற ஆபத்து நிலையினின்றும் விலகிக் குறைந்த புள்ளியில் விசேடமாக அழகியல பாடம் ஒன்றில் அனுமதி பெறும் வாய்ப்பு உண்டு. இன்று யாழ் பல்கலைக் கழகத்தில் கலைத்துறைக்கான அனுமதியில் 50வீதமான மாணவர்கள் இச்சூழ்நிலையின் கீழ் அனுமதிக்கப்பட்டவர்களே.

இராமநாதன் நுண்கலைத்துறை மாணவர்களின் அனுமதியும் அவர்கள் தொடர்ந்து பல்கலைக்கழகத்தில் அப்பாடங்களைக் கற்பதற்கும் இதுவே காரணம்.

**உயர்தர வகுப்புப் பின்னணி நோக்கு**

உயர்ந்தளவு புள்ளிகளைப் பெறுவதறகோ அல்லது படிககககூடிய வசதிகள் பாடசாலையில், தனியார் கல்வி நிலையங்களில், குடும்பச் சூழ்நிலையில், பரீட்சை சம்பந்தமான வெளியீடுகளில் இருப்பதால் பாடங்களைத் தெரிவு செய்த மாணவர்கள் தொடர்ந்தும் அப்பாடங்களையே பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கான பாடங்களைத் தெரிவு செய்யும் இயல்பு உண்டு.

மாணவர்கள் முனனரே பல ஆணடுகள் கற்ற பாடங்கள் சார்பான அறிவு பல்கலைககழகத்தில படிப்பதறகு அடித்தளமாக இருக்கும் என்ற நம்பிக்கையில் அதே பாடத்தைத் தெரிவு செய்கினறனர். உண்மையில் பல்கலைக்கழகப் பாடத் தெரிவு விதிமுறைகளில் உயர்தர வ்குப்பில் கற்ற பாடங்களையே கட்டாயம் தெரிவுசெய்ய வேண்டும் எனற நிபநதனை ஏதுமில்லை. இருந்தபோதும், பல்கலைக்கழகத்திலுள்ள பாடத்துறைகள் தங்கள் பாடங்களைக் கறகும மாணவர்கள் ஏற்கனவே அப்பாடத்தை உயர்தர வகுப்பிலும் படித்திருப்பது விரும்பத்தக்கது என்ற விருபபததை வெளிப்படுத்துவதால் மாணவர்கள் ஏதோ ஒரு வகையில் பாடத்தெரிவில் சில நியமங்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக மாறிவிடுகின்றனர்.

ஆனால் பாடசாலையில் கற்பிக்காத பாடங்களைப் பல்கலைக்கழகத்தில் மாத்திரம் படிக்கக்கூடிய வசதிகளும் உண்டு. அவ்வாறு கற்கப்புகும் மாணவர்களுக்கு முன்னைய பாடத்தெரிவில் அனுபவத்தை வலியுறுத்துவது அர்த்தமற்றதாகிவிடும். குறிப்பாக சமூகவியல், மெய்யியல், தொல்லியல், மொழியியல், உளவியல் போன்றவை பாடசாலைக் கலைத்திட்டத்தில் இல்லாத பாடங்களேயாகும். இவற்றினைப் படிக்க விரும்பும் மாணவர்கள் பல்கலைக் கழகத்திலேயே ஆரம்ப அறிவையும், விசேட அறிவையும் பெற முடியும்.

உயர்தர வகுப்பின் கலைத்திட்டத்திற்கு அமைவாகக் கற்கக்கூடிய பாடஙகளைக் கற்கும் சந்தர்ப்பத்தைப் பல்வேறு காரணங்களால் இழந்த மாணவன் ஒருவன் (குறிப்பாகக் கூடிய புள்ளியைப் பெறவேண்டும் என்பதற்காக இலகுவான பாடங்களைப் பாடசாலையில் தெரிவுசெய்த மாணவர்) பல்கலைக்கழத்தில் தன்னை மேலும் வளர்த்துக கொளவதற்காக அனுபவமிலலாத பாடங்களைத் தெரிவுசெய்வதையும் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக, பொருளியல், அரசறிவியல், சமூகவியல் போன்ற பாடங்களைப் பல்கலைக்கழகத்தில் விரும்பித் தெரிவுசெய்யும் மாணவர்கள் உண்டு.

**இலட்சிய நோக்கு**

தமிழ்மொழியியல், தமிழ் இலக்கியத்தில் பாண்டித்தியம் பெறவேண்டும் என்ற இலட்சிய வேட்கையோடு அல்லது நல்ல மத அறிவைப் பெறுதலே தனது இலட்சியம் என்ற நோக்கோடு இந்து கிறிஸ்தவ நாகரிகத்தைப படிக்க விரும்பும் மாணவர்கள், பழந் தமிழ் இலக்கியங்களை அல்லது இந்துப் பண்பாட்டுக் கருவூலங்களை அறிவதற்கு சமஸ்கிருதப் பாடத்தைத் தெரிவு செய்வோரும், நல்ல அரசியல்வாதியாக வரவேண்டும் என்ற இலக்கோடு அரசறிவியல் கற்கும் மாணவருக்கும் நல்ல நாடகவியலாளராக, நடிகராக வரவேண்டும் என்ற இலக்கோடு நாடகமும் அரங்கியலையும் கற்கும் மாணவர்களும், தமிழர் பாரம்பரியத்தை அறியவிரும்பி தொல்லியல், வரலாறு போன்ற பாடங்களைக் கற்கும் மாணவர்களும், நல்ல பொறியியலாளனாக, சமூகவியலாளனாக, புவியியலாளனாக வரவேண்டும் என்ற இலட்சிய நோக்குடன் பாடங்களைத் தெரிவுசெய்யும் மாணவர்களையும் காண்கிறோம்.

**பொருளாதார நோக்கு**

குறைந்த நேரத்திலும் குறைந்த செலவிலும் கற்கக்கூடிய பாடங்களைத் தெரிவு செய்பவர்களும் உண்டு. அதே வேளை குறிப்பிட்ட பாடங்களைக்கற்பதன் மூலம் வேலைவாய்ப்பை உடனேயே பெற்றுக்கொள்ளமுடியும் என்ற நோக்குடன் குறிப்பிட்ட பாடத்தைப் படித்த பட்டதாரிகளுக்கான கேள்வி அதிகம் உண்டு.

ஆகவே விரைவில் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளும் வாய்ப்பு உண்டு என்ற நோக்கோடு பாடங்களைத் தெரிவுசெய்யும் நிலைமையும் உண்டு.

இலங்கையில் மாத்திரமல்ல வெளிநாடுகள் எங்காவது வேலைவாய்ப்பைப பெற்றுத்தரக்கூடிய சர்வதேச ஒழுங்கு முறைக்கு உட்பட்ட பாடங்களைத் தெரிவுசெய்யும் மாணவர்களும் உண்டு.

குறிப்பாகப் பொருளியலை அல்லது புவியியலை, சமூகவியலை ஒரு பாடமாகத் தெரிவுசெய்யும் மாணவர்களது பாடத்திறகான ஒழுங்குகள், கலைத திட்டஙகள் சர்வதேசமடடத்துடன் தொடர்புடையதாக இருக்கும். மற்றும் தமிழர் வரலாறு, இந்துசமயம், தமிழ் இலக்கியம் போன்ற பாடங்களுக்கான ஒழுங்குவிதிகள், சர்வதேச நாடுகள் எல்லாவற்றிலும் இல்லை.

எனவே மாணவர் பாடங்களைத் தெரிவுசெய்யும் போது சர்வதேச ஒழுங்கிற்குட்பட்ட வர்த்தகம், பொருளியல், புவியியல். சமூகவியல் பாடங்களைத தெரிவுசெய்யும் நிலையும் காணப்படுகின்றது.

சர்வதேச ஒழுங்குமுறைக்குட்பட்ட பாடமாக இருப்பதால் நல்ல தொழில்வாய்ப்பும் வருமான வாய்ப்பும் உண்டெனக் கருதி இப்பாடங்களைத் தெரிவுசெய்யும் மாணவர்களும் உண்டு.

* * *

## இன்று ஒரு தகவல்

# பாகற்காய் மருத்துவம்

ஒரு மரண வீட்டில் பல பெண்கள் கூடியிருந்து அழுது கொண்டிருக்கின்றார்கள். அதில் அழுது கொண்டிருக்கும் இரு பெண்களுக்கு இடையில் நடந்த உரையாடல் இது. அவர்களில் ஒரு பெண்மணி கூறுகிறார் இப்படி "பந்தலிலே பாகற்காய்,பந்தலிலே பாகற்காய்" என்கிறார். மற்றைய பெண் மணி அதற்கு "போகும்போது பார்த்துக் கொள்ளலாம், போகும் போது பார்த்துக் கொள்ளலாம்" என்கிறார். ஆனால் தனது கணவனைப் பறிகொடுத்த அந்தப்பெண்ணோ அழுது கொண்டு இப்படிக் கூறுகின்றார் என்ன தெரியுமா? "அது விதைக்கல்லவா போட்டிருக்கு, விதைக்கல்லவா போட்டி ருக்கு" இறந்தவரை நினைத்து அழுவதும் நடக்கின்றது. அழுது கொண்டே இந்தப் பாகற்காய் மீதும் ஒரு கண்ணாக இருக்கின்றனர்.

ஏனைய மரக்கறிகள் இருந்தாலும் கூட பாகற்காய் மீது மட்டும் ஏன் அவ்வளவு கவனம்? என்று யோசித்துப் பார்த் தால் பாகற்காயின் மகத்துவங்கள் நமக்குப் புரியும். பாகற் காய்க்குப் பல்வேறு விதமான சிறப்புக்கள் இருக்கின்றன.

பாகற்காயின சரித்திரத்தைத் தான் இன்றைய தகவலில் கூறப்போகின்றேன். சீனர்கள் பழங்காலத்திலிருந்தே பாகற் காயை உண்டு வந்திருக்கின்றனராம். அவர்களின் மொழி யில் சாந்தூவா என்பது தான் பாகற்காயின் பெயர். இது நோயின் பெயரா அல்லது காயின் பெயரா என்பது எமக்குத் தெரியாது. இருந்தாலும் இது ஒரு பெயர்.

முதலில் பாகற்காய் தன்னிச்சையாகவே தான் வளர்ந் தது. அதன் பின் வளர்ச்சிக் காலத்தில் இதனைப் பார்த்த மனி தர்கள் இதனை உண்ணத் தொடங்கினார்கள். கசப்பாக இருந் தாலும் இதில் பல பயன்கள் இருப்பதாகக் கண்டுபிடித்துள் ளனர்.

கி.பி. 1400 ஆம் ஆண்டில் சீனர்கள் பாகற்காயைப் பற்றி எழுதியிருக்கின்றனர். முதலில் பாகற்காய் முட்டை போன்று உருண்டையாக இருந்ததாம். 200 வருடங்களுக்குப் பின்பு பல்வேறு ஆராய்ச்சிகள் செய்து 6லிருந்து 8 அங்குலம் நீளம் வளருமாறு செய்தனர். இருந்தாலும் உருண்டைப் பாகற் காய்க்கு இருந்த மகத்துவம் தற்போது உள்ள பாகற்காய்க்கு இல்லையாம்.

பாகற்காயில் என்னென்ன சத்துக்கள் இருக்கின்றன எனச் சிறிய கணக்குப் போடுகின்றனர். இவை ஏற்கனவே நமக்குத் தெரிந்தவை தான். என்றாலும் அவற்றில் சில வற்றைத் தெரிந்து கொள்ளலாமே! 100கிராம் பாகற்காயில் இருக்கும் உணவுச்சத்துக்கள் என்ன என்று கணக்குப்போடு கின்றனர். கலோரி 25 சதவீதம், கல்சியம் 20 மில்லிக் கிராம், பொஸ்பரசு 70 மில்லிகிராம் அதுபோன்று இன்னும் அதிக மான சத்துக்களும் இருக்கின்றன. புரதம், கொழுப்பு, இரும் புச்சத்து, மாச்சத்து, விற்றமின் சி போன்ற பல சத்துக்கள் நிறைந்தது தான் பாகற்காய்.

இதற்கு மருத்துவக் குணங்களும் நிறைய உண்டு. பாகற் காயின் சுவையினது சிறப்புத் தன்மை என்னவென்றால் கசப்பு. கசப்பு என்றாலே நமக்கு ஓர் வெறுப்பு வரும். ஆனால் அறு சுவைகளில் ஒன்று கசப்பு! அந்தச் சுவையும் நமது உணவில் அவசியம் இருக்க வேண்டும் என்று பெரியவர்கள் கூறுகின்ற னா. சர்க்கரை வியாதிக்கு இது ஓர் அருமருந்து. இரத்தப் புற்றுநோய், குடற்புண், இரத்த அழுத்தம், மலச்சிக்கல் எனப் பல வியாதிகளுக்கும் பாகற்காய் மருந்தாக அமைகின்றது.

மேற்கிந்தியத் தீவுகளில் சிறுநீரகத்தில் தோன்றும் கற் களுக்கும், குடற்புண்ணுக்கும் இதனை மருந்தாகப் பயன் படுத்துகின்றனர். இதன் இலையை கொதிக்க வைத்து அந்தச் சாறை எடுத்து கல்லீரலின் உபாதைக்கு இதனைப் பயன்படுத்துகின்றனர்.

பாகற்காய் விதையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் இருக்கின்றதல்லவா? அதைக் காயங்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தலாமாம். பாகற்காய்ப்பழம் சிறந்த டொனிக்காகப் பயன்படுகின்றதாம். மாதவிடாய் ஒழுங்கின்மையை இது சரிப்படுத்துமாம்.அமேசன் வனவாசிகள் இதனை உணவாக மட்டுமன்றி மருந்தாகவும் பயன்படுத்துகினறனராம். ஒரு நாட்டில் பாகற்காயை அம்மை நோய்க்கும், மலேரியாவுக்கும் பயன் படுத்துகின்றனராம் .உடலில் ஏற்படும் கட்டிகள், புண்கள் போன்றவற்றுக்கு ஒரு கப் பாகற்காய் சூப்பில் ஒரு தேக் கரண்டி எலுமிச்சஞ்சாறு கலந்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் உட்கொண்டால் குணமாகி விடும்.3 மாதங் களுக்கு இப்படிச் செய்தால் இரத்தம் தூய்மையாகி விடும். தோல் பளபளப்பாகி விடுமாம்.

சாக்கரை வியாதி உள்ளவர்களும் மஞ்சட் காமாலை உள் ளவர்களும் இதனை உட்கொள்ளலாம். கல்லீரல் பிரச்சினை கள் வராமல் இது தடுக்கின்றதாம். மூல வியாதி உள்ளவர் களும் இதைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த நோயில் இருந்து மீளலாமாம்.

ஒருவர் தனது மனைவியிடம் இந்த விபரங்களைக் கூறு கின்றார்! மனைவியும் புரிந்து கொண்டு "நாளை சமைய லில் ஜமாய்த்து விடுகின்றேன்" என்றார். மத்தியானம் சாப்பிட உட்கார்ந்தார். "என்ன கறி ?" என்று கேட்டார் இவர். அதற்கு அவர் " இன்று பாகற்காய் சாம்பார்" என்றார்! கூட்டுக் கறி வைத்தார். அதுவும் பாகற்காய் கூட்டு. " என்ன ரசம் வைத்தாய்?" என்றார். இவர் அதுவும் பாகற்காய்ச் சாறு ரசம் என்றார் மனைவி. இவர் முகத்தைச் சுழித்தார். "சரி பரவாயில்லை தயிர்விடு, ஊறுகாய் வை" என்றார். அதுவும் பாகற்காய் ஊறுகாய் தான். இவர் என்னவாகியிருப்பார் என்று பாருங்கள்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புலிகள் மீது மீளப் போரைத் திணித்தால் அரசு பாரிய விளைவுகளைச் சந்திக்கும்

## எச்சரிக்கிறது வொய்ஸ் ஒ.்.ப் அமெரிக்கா

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலையால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பலமிழந்துவிட்டதாக எண்ணி தனது இராணுவ நடவடிக்கையை அரசு அவர்கள் மீது திணித்தால் அது அரசிற்கு கடுமையான பாதகமான எதிர்விளைவுகளையே உருவாக்கும் என்று வொய்ஸ ஒ.்.ப் அமெரிக்கா வானொலி நேற்று தெரி வித்துள் ளது.

ஆழிப்பேரலையினால் இருதரப்பும் எதிர்நோக்கும் சவாலகள் பற்றி அவ் வானொலி மேலும் தெரிவிக் கையில்,

நிலப்பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத் திருப்பதுடன், அப்பகுதிகளை நிர்வகித்தும் வரும் மிகவும் கட்டுக்கோப்பான ஒரு அமைப்பே நீண்டகால மாக தன்னாட்சி கேட்டு போராடிவரும் தமிழீழ விடு தலைப்புலிகள் அமைப்பு.

இந்தோனேசிய போராளிகளுடன் ஒப்பிடும் போது, விடுதலைப்புலிகள் அமைப்பினர் மிக வும் விரைவிலேயே தங்களை பலப்படுத்தக் கூடிய வல்லமை இருப்பதனையும் அவதானிக்கலாம்.

ஆழிப்பேரலையினால் புலிகள் பலமிழந் திருக்கலாம், எனவே சந்தர்ப்பத்தினை சாதக மாக்கலாம் எனக் கருதி அவர்கள் மீது இரா ணுவ பலத்தையும் அரசு பிரயோகிக்கவும் முயல லாம். இவ்வாறானதொரு முடிவு பாதகமான எதிர்விளைவுகளை உருவாக்கும்.

இதனால், இரு தரப்பும் தங்களது வேறுபாடு களை களைந்து, நிவாரண மற்றும் புனர்நிர் மாணப் பணிகளில் ஈடுபடுவதே சிறந்தது எனவும் அவ் வானொலி மேலும் தொிவித்துள்ளது. (ப-4)

# நிவாரணம் பாதிக்கப்பட்டோரை சென்றடைவதை உறுதிப்படுத்துமாறு பொலிஸாருக்கு ஆலோசனை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங் களுக்கு நிவாரணப் பொருட்களைக் கொண்டு செல்லும் அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்துமாறு சமூக நலன்புரி சேவைகள் அமைச்சு பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கி யுள்ளது.

இந்தச் செயற்திட்டம் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்படடுள்ளதாக சமூக நலன்புரி சேவைகள் அமைச்சின் செயலாளர் சீதா ராஜபக்ஸ தெரிவித் தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டிய நிவா ரணப் பொருட்கள் உரியவர்களுக்குச் சென்றடை யாமல் இடையில் வேறு நபர்களுக்குக் கிடைப்பதாக பல்வேறு தகவலகள் கிடைக்கப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கமைய பாதிக்கப்பட்ட பிரதேசங களுக்கு அனுப்பப்படும் நிவாரணப் பொருடகள் உரிய முறையில் பிரதேச செயலாளாகளுக்குக் கிடைககின்றதா என்பது குறித்தும் விசேட கவ னம செலுத்தப்பட்டு வருகின்றது. நிவாரணப் பொருட்களை ஏற்றிய வாகனங்களில் சமூக நலன் புரி சேவைகள் அமைச்சிலிருந்து அதிகாரிகளை அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

வழங்கப்படும் உதவிப் பொருடகள் உரிய முறையில் மாவட்ட பிரதேச செயலாளர்களுக் குக் கிடைப்பதாகக் குறிப்பிட்ட அதிகாரிகள் அமைச் சுக்கு அறிவிககவேண்டும் எனவும் உத்தரவிடப பட்டுள்ளது. (ந-4)

## இராசி பலன்

**17.01.2005**

**(தை 4 திங்கட்கிழமை)**

**சப்தமி காலை 6.38 மணிவரை**

**அட்டமி மு.ப.6.39 தொடக்கம்**

**ரேவதி நண்பகல் 12.06 வரை**

**இராகுகாலம் 8.05 -9.35 மணிவரை**

**சுபநேரம் 12.35 - 2.05 மணிவரை**

**மேடம்** தெய்வ சிந்தை, நல்ல முயற்சி, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு.

**இடபம்** காரிய அலைச்சல், சுப செலவு, சயனசுகக்குறைவு, மனஸ்தாபம்.

**மிதுனம்** அதிகாரம், சகோதரர் உதவி, எடுத்த கருமங்கள் கைகூடும்,நல்ல வருமானம்.

**கடகம்** நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி, தொழில் விருத்தி, அதிகாரம்.

**சிங்கம்** புதிய திட்டமிடல், பிதா சிந்தை, எடுத்த கருமங்கள் தாமதமாகும், பணவிரயம்.

**கன்னி** எதிர்பாராத பிரச்சினை, வாகன பயம், முயற்சி தாமதம், உடல் வியாதி.

**துலாம்** அபூர்வசந்திப்பு, களஸ்திர நன்மை, பிரயாண சுகம், தொழில் நன்மை.

**விருச்சிகம்** சகோதரர் உதவி, தேகநலன், நல்ல முயற்சி, பண வருவாய்.

**தனுசு** வியாபார விருத்தி, குடும்பக் கவலை, காரிய தாமதம், தன விரயம்.

**மகரம்** உஷ்ண வியாதி, மாதா சுகம், புதிய முயற்சி, கல்வியில் ஆர்வம்.

**கும்பம்** கூட்டு முயற்சி, பண வருமானம், காரிய அனுகூலம் போசன சுகம்.

**மீனம்** அதிக செலவு, வீண் மனஸ்தாபம், முயற்சி தாமதம் போசன சுகக் குறைவு.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

## யு.என்.எச்.சி.ஆர். ஆணையாளர் செவ்வாயன்று இல.வருகிறார்

## வடக்கு–கிழக்கிற்கும் வருவார்

(கொழும்பு)

யு.என்.எச்.சி.ஆரின் உதவி ஆணையாளர் கமல் மர்ஜன் இரண்டு நாள் பயணமொன்றை மேற்கொண்டு நாளை செவ்வாய்க்கிழமை கொழும்புக்கு வருகை தரவுள்ளார்.

20ஆம் திகதி வரை கொழும்பில் தங்கி யிருக்கும் இவர், தமிழர் தாயகப்பகுதியான வடக்கு-கிழக்கு மகாணம் உட்பட ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட சகல மாவட் டங்களுக்கும் பயணம் செய்யவுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களின் மீள்குடியேற்றம் மற்றுமதங்காலிக குடியேற்ற வசதிகள் குறித்து குறிப்பாக இவர் கவனம் செலுத்தவுளளார். இவருடன் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் ஜனட் லீமும் வருகை தரவுள்ளார்.

இ[illegible]வேளை, ஆசிய அபிவிருத்தி வங்கியின தலைவா [illegible]னோ 2 நாள் பயணமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் இரவு கொழும்பு வந்தடைந்தார்.இ[illegible]ரும் பாதிக்கப்பட்ட இடங் களை நேரில் சென்று பார்வையிட்டு மேற்கொள்ள வேண்டிய உதவிகள் குறித்து ஆராய்வார்.

இதற்கிடையில் சர்வதேச நாணய நிதியம் இவ்வருடம் இலங்கையிடமிருந்து மீள அறவிட வேண்டிய கடன் தொகையையும் அதற்கான வட்டியையும் நீக்கியுள்ளது. இதன் பிரகாரம் இலங்கை இவ்வருடம் செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டித் தொகையான 11கோடி 35 இலட் சம் அமெரிக்க டொலரை செலுத்த வேண்டிய தில்லை. இதுபற்றி சர்வதேச நாணய நிதியம் நேறறு முன்தினம் உத்தியோக பூர்வமாக அறி வித்துள்ளது. (ப-4,8)

## களவாக மாடு ஏற்றி வந்தவர்கள் பொலிஸாரால் கைது

கடந்த 4 ஆம் திகதியன்று அராலி வடக்கு, கல்லுண்டாயில் கடமையில் ஈடுபட்டிருந்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் சுழிபுரம் பெரிய புலோ என்ற இடத்திலிருந்து மூன்று மாடு களை ஏற்றி வந்த டிராக்டரை நிறுத்தி அதில் வந்த மூவரை விசாரித்த போது அவர்களிடம் மாடுகளை ஏற்றி வருவதற்கான அனுமதியோ, வாகனச் சாரதி அனுமதிப்பத்திரமோ இல்லா திருப்பதைக் கண்டனர்.

இவர்கள் மூவரையும் கைது செய்த பொலி ஸாா இவர்களை அடுத்தநாள் மல்லாகம் நீதி மன்றத்தில் ஆஜர் செய்த பொழுது வழககை விசாரித்து நீதிபதி அவர்களை தலா 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்ததோடு, ஏற்றி வரப்பட்ட மாடுகளை அப்பிரதேச கிராம அலுவலா மூலம ஏலத்துக்கு விட்டு அதன கட்டளையை நீதி மன்றத்துக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.(து-39)

# வெளிநாட்டுப் படைகளின் மனிதநேய உதவிகளை விடுதலைப் புலிகள் பிரித்துப் பார்ப்பதில்லை

## தூயமனிதாபிமான உதவிகளாகவே கருதுகிறோம் என்கிறார் சு.ப.

(கொழும்பு)

**அமெரிக்கா உட்பட, அனைத்து நாடுகளும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளன. தொண்டு அடிப்படையில் செயற் படுகின்றன. இதை தூயமனிதாபிமான கடமை என்றே நாம் கொள்கிறோம். ஆதலால் எந்தநாடு உதவுகிறது? அது எத் தகைய உதவி? என நாம் பிரித்துப் பார்ப்பது இல்லை. அலட் டிக் கொள்வதுமில்லை.**

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க கரையோரக் காவற்படையினர் இங்கு நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருவது தொடர்பாக தங்கள் கருத்து என்ன? என்று, வெளிநாட்டு நிருபர் வினவிய தற்கே அவா இவ்வாறு பதிலளித் துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, தென்கிழக்காசிய பிராந்திய நாடுகள் சுனாமி பேரலைகளால் பெரிதும பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக் கப்பட்ட நாடுகளுக்கு உதவ அநேக நாடுகள் முன்வந்துள்ளன. அவற்றில் ஒன்று அமெரிக்கா. அனர்த்தங்களால் பாதிக்கப் பட்ட ஒரு இக்கட்டான தருண மிது. இந்நிலைப்பாட்டில், ஒருவர், இந்த உதவிகளை அரசியல் நோக்கோடு பாக்க வேண் டிய அவசியமில்லை.

அப்படி அணுகவும் கூடாது. சுனாமியின் தாக்கத்துக்கு இலக்கான நாடுகளைச் சோந்த மக்கள் அவல நிலைக்கு உள் ளாக்கப்பட்டுள்ளார்கள். துன்பியல் நிலைக்கு தள்ளப்பட்டுள் ளாகள். மனிதாபிமான சமத்துவ நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் அரிய பணிகளில் அநேக நாடுகள் ஈடுபட்டுள்ளன. ஒவ்வொரு நாடும் தத்தம் சொந்த வழிக் கேற்ப உதவி புரிகின்றது.

பாதிக்கப்பட்ட நாடுகளின் தேவைகளை அறிந்து, உணர்ந்து, தத்தமக்குரிய வளங்களின் அடிப்படையில் இந்நாடுகள் உதவி புரிகின்றன.

இலங்கையில் சுனாமி அனாத்தங்களால் நிர்மூலமாக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள், மீட்புப்பணிகள், புனா வாழ்வு, மீள்கட்டமைப்பு நடவடிக்கைகள ஆகியவற்றில் அமெரிக்கா, பிரிட் டன், கனடா , இந்தியா, பங்களா தேஷ் ஆகிய நாடுகள் தம் ஆயுதப் படைகளின் சேவைகளை விஸ்த ரித்துள்ளன.

உலகில் எந்த ஒரு பகுதியில் பேரழிவுகள் இடம்பெற்றாலும் உடனடியாக சர்வதேச



சமூகம் உதவ முனைகின்றது. இன்றைய. உலக ஓட்டத்தில், இது ஒரு பொதுவான அரிய நிகழ்வாகவுள்ளது. இது ஆரோக்கியமான ஒரு நடைமுறை. நாமும் அதை அப்படியே நோக்குகின் றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

# உடைமைகளை இழந்தாலும் மனம் உடையாத தமிழ் மக்கள்

## கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

'சுனாமி' அலையினால் மீன்பிடிப படகுகள், கப்பங்கள் உடைந்து போனாலும் இவற்றால் பாதிப்படைந்த மக்களின் மனங் கள் உடையவில்லை. நேற்று முன தினம் வல்வெட்டித்துறைப பகுதியில் உடைந்த நிலையில் உள்ள மீன்பிடிப்படகுகளை தாங் களே திருத்திக் கொண்டிருந்த தைக் கண்டு நான் வியப்படைந் துள்ளேன்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய் திருந்து கனடா நாட்டு நாடாளு மன்ற உறுப்பினரும் ரொறனரோ மாநில போக்குவரத்து அமைசசின செயலாளருமான ஜிம்.அாயோண்ஸ் கடநத செவ்வாய்க்கிழமை யாழ். பொது நூலகத்தில் நடந்த கலந் துரையாடல் ஒனறில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

யாழ்.மாநகர் ஆணையாளரின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, பத்மினி சிதம்பரநாதன் மற்றும் கனடா நாட்டுக் குழுவினர் மற்றும் மாநகர சபை உத்தியோகஸ்தர்கள் பொது மக்கள் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், 1964 ஆம் ஆண்டில் கனடாவிலும் சுனாமியின் தாக்கத்தால் பலர் பாதிப்படைந் திருந்தனர். அந்நேரத்தில் நான் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். அந்நேரத்தில் எம் மக்கள் பட்ட கஷ்டங்களை உணர்ந்தவன் என்ற வகையில் இங்கு நடந்த சுனாமி அனர்த்தத் தினால் பாதிப்படைந்த மக்க ளுடன் நானும் பங்கு கொண்டு வேதனைப்படுகின்றேன். தென் கிழக்கு ஆசியாவிலும் தென்னா சியாவிலும் சுனாமியால் பாதிப் படைந்த நாடுகளுக்கு உதவு முக மாக கனடா அரசாங்கம் 4 ஆயி ரத்து 500 கனேடிய டொலர்களை உதவியாக வழங்கியுள்ளது.

எமது நாடு உதவி வழங்கும் போது இனப்பாகுபாடு காட்டு வதில்லை. எல்லா ம்னிதரின் உடல்களிலும் சிவப்பு இரத்தம் தான் ஓடுகின்றது. எங்களுடைய உதவிகள் இங்கு பாதிப்பு அடைந் துள்ள சகலருக்கும் சமனாகவே வழங்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய அரசின் கொள்கை என அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராஜா தமது உரையில், இங்கு வந்திருக்கும் நாடாளுமன்ற உறுப்பினருக்கு எங்கள் நாட்டுப் பிரச்சினை நன்கு தெரியும்.

எனவே, அவருக்கு கடந்த 50 வருட காலமாக தமிழர்கள் பட்டு வரும் இன்னல்கள் பற்றிச் சொல் லத் தேவையில்லை. இலங்கை ஜனாதிபதியும் ஜே.வி.பியும் தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகவே நடத்துகின்ற னர். எங்களுக்குக் கிடைக்கின்ற உதவிகளை அவர்கள் வேண்டு மென்றே தட்டிப்பறிக்கின்றார்கள். இதுவரையிலும வெளிநாடுகள் வழங்கிய உ தவிப் பொருட்கள வடக்குக்கு வரவில்லை.

அணமையில ஐ.நா. செயலாளர் நாயகம் பாதிப்படைந்த தமிழர் தாயகத்தைப் பார்க்காமலேயே செல்வதற்கு வழி வகுத்தவர் கள் இவர்களே. எனவே இலங் கைக்கு வருகை தரும் கனேடிய பிரதமர் சேதம் அடைந்த வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்க்கவேண்டும் எனக் குறிப் பிட்டார். (து-05)

### ஏமாற்றம்

கிராமசேவகா பதவி வெற்றிடங் களை நிரப்புவதற்கான போட டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு இரண்டு வருடங் களுக்கு மேலாகியும் இதுவரை பரீட்சை நடைபெறவில்லை.

இதனால் விண்ணப்பித்தவர்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர். (ப-106)

### அழிக்கப்பட்டன

(பொலிகண்டி)

டெனிஸ் கண்ணி வெடியகற் றும் பிரிவினரால் புன்னாலைக் கட்டுவன், மல்லாகம், குப்பிளான் போன்ற பிரதேசங்களில் மீட்கப்பட்ட 183 கண்ணிவெடிகள் குப்பிளானில் அமைந்துள்ள ஆயுத அழிப்பு குழியில் வைத்து வெடிக்க வைக்கப்பட்டன. (ப-106)

### இடை நிறுத்தம்

(பொலிகண்டி)

புத்தூர் மெதடிஸ்த மிசன் பாடசாலைக்கு அருகாமையில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடி களை மீட்கும் பணிகளில் ஈடு பட்டுவந்த 'ஹலோ டிரஸ்ற்' நிறுவனம் அப்பகுதியில் நீர் தேங்கிக் காணப்படுவதால் வெடி யகற்றும் பணியினை தற்காலி கமாக இடைநிறுத்தியுள்ள தாகத் தெரிய வருகின்றது. (ப-106)

### யாத்திரை

(கோண்டாவில்)

சமாதானமும் சாந்தியும் நிலைக்க வேண்டி பாத யாத் திரை ஒன்று நடைபெறவுள் ளது.

ஏழாலை ஆத்மஜோதி மணி மண்டபத்தில் இருந்து ஆரம்ப மாகவுளள இப பாத யாத்திரை 22,23 ஆம் திகதிகளில் நடை பெறவுள்ளது. (ப-130,9)

# சர்வதேசத்தின் உதவிகளின் மூலம் உரிய நிவாரணம் வழங்க முடியும்.

## ஐ.நா. ஒருங்கிணைப்பாளர்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் காரண மாகப் பாதிக்கப்பட்டு அகதிக ளாக்கப்பட்டவர்களுக்கும் யுத் தம் காரணமாக இடம்பெயர்ந்த வர்களுக்கும் புனர்வாழ்வு அளிப் பதற்கு இணைந்த தேசிய திட் டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட் டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக் கான உயர்ஸ் தானிகராலயம் இவ் விடயததை வலியுறுத்தி யுள்ளது.

தற்போது இலங்கை அரசிற் குக் கிடைத்து வரும் சர்வதேச நிதியுதவிகள் மூலம் உள்நாட்டு யுத்தம் காரணமாகவும், சுனாமி அனர்த்தம் காரணமாகவும் இடம் பெயர்ந்த மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்க முடியும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் ஒருங் கிணைப்பாளர் மிறைட் தெரி வித்துள்ளார். (ற-9)

# கவிஞர் துரைசிங்கத்திற்கு கலாபூஷணம் விருது

ஓய்வு பெற்ற அதிபரும், வலம்புரி நாளிதழின் ஆசிரிய பீடத்தில்



கடமையாற்றுபவரும், பல கவிதை நூல்களின் ஆசிரியருமான கவிஞர் சு.துரைசிங்கத்துக்கு இந்து கலாசர்ர அமைச்சினால கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

இந்த விருது இவருடன் சேர்ந்து வடக்கு-கிழககின் 30 கலைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

விருது வழங்கும் வைபவம் எதிர் வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு ஜோன் டி சில்வா கலையரங்கில் நடைபெறும். சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரது பண்சுமந்த பாடல் கவிதைத் தொகுதிக்கு இந்து கலாசார அமைச்சினால் விருதும் சன்மானமும் கிடைத்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (து)

# (சா/த) விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெற்ற பாடசாலைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் திருத் தும் பணிக்காக மூடப்பட்டிருந்த சகல அரசாங்கப் பாடசாலைகளும் இவ் வாண்டு முதலாந் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று திறக்கப் படவுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் நடை பெற்று முடிந்த க.பொ.த சாதார ணதரப் பரீட்சை விடைத்தாள் திருத தும் நடவடிக்கைகள் இம்மாதம் மூன்றாம் திகதி தொடக்கம் நாடளாவிய ரீதியில் 70 பாடசா லைகளில் இடம்பெறறு வந்தன.

சகல அரச பாடசாலைகளிலும் முதலாந் தவணை கல்வி நடவடிக் கைகளுக்காக கடந்த திங்கட் கிழமை ஆரம்பிக்கப்பட்ட போதி லும், விடைத்தாள் திருத்தும் நிலை யங்களாகச் செயற்பட்டு வந்த 30 பாடசாலைகள மூடப்பட்டிருந்தன.

இப் பாடசாலைகள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் திறக்கப் படவுள்ளதாக கல்வியமைச்சு அறி வித்துள்ளது.

இதேவேளை, கல்விப் பொதுத் தராதர சாதரணதரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக் கைகள் சுனாமி அனர்த்தம் கார ணமாக தாமதமாக ஆரம்பிக்கப் பட்டிருந்த போதிலும், ஏற்கனவே திட்டமிட்டபடி பரீட்சை முடிவுகள் யாவும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படு மென பதில் பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுரா எதிர்சிங்க தெரி வித்துள்ளார். (ற-4)

# மாறுமா இந்திய வெளியுறவுக் கொள்கை?

கடற்புவி நடுக்க ஆழிப்பேரலையால் இலங்கைத் தீவகத்தில் உள்ள தமிழீழத்தில் சுமார் 20 ஆயிரம் தமிழ் உறவுகளை இழந்திருக்கிறோம். அதே எண்ணிக்கையில் இருக்கிறது காணாமல் போனவர்களின் எண்ணிக்கையும்! போரினால் தமிழர்கள் எதிர்கொண்ட இடப்பெயர்வைக் காட்டிலும் இப்போது மிகுதியாக இருக்கிறது. இலட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் ஏதிலியர்களாக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச நாடுகளிடமிருந்து மீட்புப் பணிகளுக்காக என கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை இலங்கையின் துறைமுகத்திற்கு வந்திறங்கியுள்ளன.

அமெரிக்காவின் யூ.எஸ்.எஸ்.ரிமோர் என்ற யுத்த கப்பல் இலங்கை வந்துள்ளது. 1987 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இந்த கப்பல் 186 மீற்றர் நீளமானது. விமானங்கள் தரையிறங்கக்கூடிய இரண்டு இறங்கு தளங்கள் உள்ளன. இந்த கப்பல் மணிக்கு 22 கடல் மைல் வேகத்தில் பயணம் செய்யக் கூடியது. இந்த கப்பலில் 20 உலங்குவானூர்த்திகள் மற்றும் கனரக வாகனங்கள் எடுத்து வரப்படும். இரண்டு 20 எம்.எம் வி.ரக சுடுகலன்கள் மற்றும் 25 எம்.எம் பீரங்கிகள் இரண்டு 50 கலிபர் தானியங்கி சுடுகலன்கள ஆறு மற்றும் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இரண்டு என்பன இதில் பொருத்தப்பட்டுள்ளன.

அமெரிக்க விமானப் படைக்கு சொந்தமான விமானங்கள் மூலம் இலங்கைக்கு எடுத்துவரப்பட்டுள்ள பிளக் ஹொக் வகை உலங்குவானூர்திகள், கட்டுநாயக்க விமானப் பகுதியில் சோதனை முறையில் பறந்தன.

## படை குவிப்பதன் நோக்கம் என்ன?

இலங்கையின் மீட்பு பணிகளுக்கு 1500 அமெரிக்க இராணுவ வீரர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். இந்த எணணிக்கை கூடவோ குறையவோ செய்யும் என்கிறார் அமெரிகக முன்னாள் அமைச்சர் கொலின் பவல். இந்தியாவின் 32 கடற்பட்டை கலன்கள் இலங்கைத் தீவக மீட்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. பாகிஸ்தான் 400 படையினருடன் கப்பல் ஒன்றையும் இலங்கைத் தீவுக்கு அனுப்பியுள்ளது. தெற்காசிய பிராந்தியத்தின் ஏழை நாடாகக் கருதப்படும் வங்கதேசம் தனது பங்கிற்கு கப்பல் ஒன்றை



அனுப்பிவைத்துள்ளது. பிரான்ஸ் உலங்குவானூர்திகளையும் ஜெர்மனி ஒரு விமானம் தாங்கிக் கப்பல் மற்றும் 14 சி-130 ரக விமானங்களை அனுப்பியுள்ளது.

ஆம். இவையெல்லாம் மீட்புப் பணிகளுக்குத்தான் என்று சத்தியம் அடித்துச் சொலகின்றன. இந்த நாடுகளும் இவர்களை வரவழைத்த இலங்கையும் அண்ணன் எப்ப சாவான். திண்ணை எப்ப கிடைக்கும் என்கிற வகையில் இவர்கள் இலவு காத்த கிளிபோல்தான் இருந்திருக்கிறார்கள் என்பதையே இந்த பாரிய படைகுவிப்புக் காட்டுகிறது. அதை பின்னர் பார்ப்போம். இந்த பாரிய படைகுவிப்புக்கு இலங்கை அரசு அழைப்புவிடுக்கக் காரணம் என்ன? காரணம் இல்லாமலா சிங்கள அரசு வரவழைத்திருக்கும். ஆழிப்பேரலையினால் இலங்கையில் சிங்கள மக்கள் 5 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். இதே எண்ணிக்கையில் இலங்கையின் இராணுவத்தினரும் உயிரிழந்துவிட்டனர் என்று சிங்கள ஊடகங்களே சுட்டிக்காட்டுகின்றன.

சிங்கள, தமிழ் ஊடகங்கள் அதிகாரபூர்வமாகவும் மறைமுகமாகவும் இலங்கை இராணுவத்திற்கு ஏற்பட்டுள்ள பாரிய சேதங்கள் குறித்துத் தெரிவித்துள்ள தகவல்கள் இவை:

கடல் கொந்தளிப்புக் காரணமாக கடற்படையின் 6 கடற்படைத் தளங்கள் முற்றாக சேதமடைந்துள்ளன. இதனைத் தவிர தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள 10ற்கும் மேற்பட்ட இராணுவ மற்றும் விசேட அதிரடிப்படை முகாம்களும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடற்படையின் காலி, மாத்தறை, தங்காலை, திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை கடற்படைத் தளங்கள் முற்றாக சேதமடைந்துள்ளது என்பதை பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்த அதிகாரபூர்வ அறிவித்தலின் படி 23-2வது படைப் பிரிவுத் தலைமையகம் (கல்குடா), நாகர்கோவில், பருத் தித்துறை, மணல்காடு, மாங்கேணி, காயாங்கேணி, கிண்ணியா ஆகிய இடங்களில் அமைந்துள்ள சிங்கள இராணுவ முகாம்கள் கடலில் அடித்துச் செல்லப்பட்டு தரைமட்டமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுளளது. இதில் 23-2 வது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி டபிள்யூ.எம்.எஸ். குணரத்ன உட்பட 32 இராணுவ வீரர்கள் ஒட்டுமொத்தமாகவே உயிரிழந்துள்ளனர்.

திருகோணமலையில் கண்காணிப்பில் ஈடுபட்ட மூன்று சிங்களக் கடற்படைக் கப்பலீகளும் வேறு கலங்களும் நீரில் மூழ்கியுள்ளன. குறிப்பாக திருகோணமலை சீனன்குடாவில் அமைந்துள்ள இலங்கையின் வட-கிழக்குப் பிராந்தியக் கடற்படைத் தளம் முற்றிலும் சேதமடைந்துவிட்டது. இதுகுறித்த விபரங்களை படைத்தரப்பு வெளியிடுவதை முற்றாகத் தவிர்த்துள்ளது. யாழ்ப்பாணப் பகுதியில் சிங்கள இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள காங்கேசன்துறை, காரைநகர்த் தளங்கள் பாரிய சேதம் அடைந்திருப்பதாகவும் பல கலங்கள் கடல் நீரினால் அடித்துச் செல்லப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. யாழ்ப்பாணத்தில் இராணுவம் வெளியிட்ட தகவலின் படி அவர்களின் 51-1ம் 51-4ம் 51-5ம் பிரிகேட்டுகளிற்குப் பாரிய சேதங்கள் ஏற்பட்டன. நாகர்கோவில், மணல்காடு, பருத்தித்துறை, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை, மாதகல் உட்பட 8 இராணுவ முகாம்கள யாழ்.குடாநாட்டில் முற்றாகக் கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. யாழ்.குடாநாட்டின் கண்காணிப்பை உறுதிப்படுத்தும் முகமாக அமைக்கப்பட்டிருந்த 44 கிலோ மீட்டர் நீளமான காவல்வேலியும் அதனுடன் இணைந்த மினிமுகாம்கள், காவலரண்கள், காவல் நிலைகள் என்பனவும் பேரலையால் முற்றாக அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் இராணுவம் அதிகாரபூர்வமாகவே அறிவித்துள்ளது. மட்டு-அம்பாறை பகுதியில் கல்குடா, களுவத்தை, கல்லடி, மாங்கேணி இராணுவ முகாம்களும் அறுகமபை, பானமை உட்பட்ட அம்பாறை மாவட்டத்தின் நான்கு விசேட அதிரடிப படை முகாம்களும் தரைமட்டமாகியுள்ளன.

அத்தோடு கரையோரப் பகுதிகளில் அமைந்திருந்த காவலரணகள், கண்காணிப்பு முகாம்கள என்பன கடல் நீரால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. சுமார் 400க்கும் மேற்பட்ட படையினர் பலியானதாக முதல் கட்டத் தகவல்கள் வெளியாகின.

ஆழிப்பேரலையின் நேரடிப் பெருஞ்சீற்றத்துக்குள்ளானது திருகோணமலை துறைமுகமே என்கிறது சில தகவல்கள். இங்கிருந்த 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தினரும் பெரும் எண்ணிக்கையிலான ஆயுதங்களும் கடலோடு கரைந்துபோய்விட்டது. இதனால் கதிகலங்கிப் போன ஜனாதிபதி சந்திரிகா முதலில் இந்தியாவிடம் உடனடியாக ஒரு போர்க்கப்பலை அளிக்குமாறு கையேந்தி நின்றார். உடனே இந்திய அரசும் பெரும் எண்ணிக்கையிலான நிவாரணப் பொருட்களுடன் இலங்கைக்குப் போர்க்கப்பல்களையும் அனுப்பிவைத்தது. திருகோணமலையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் விட்டுச்சென்ற எண்ணெய் சேமிப்புக் கிடங்குகளை இந்தியா பெரும் எண்ணிக்கையில் நண்டகாலக் குத்தகைக்கு எடுத்திருப்பதாகக் கூறிக்கொண்டு திருகோணமலையில் ஏற்கனவே கால்பதித்து இருந்தது. தன்னை வலுப்படுத்திக் கொளள நல்ல சந்தர்ப்பம் என்று. எண்ணிக்கொணடு மீட்பு, நிவாரண நடவடிக்கையை இந்தியா மேலும் துரிதப்படுத்தியது. இலங்கை அரசுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டு அதன் தேவைகளைப் பூர்த்தி செயவதாகவும் உறுதி செய்து வந்தது. உடனடி இராணுவத் தேவைகளை இந்திய அரசிடமிருந்து பூர்த்தி செய்து கொண்ட சிறீலங்கா அரசு எதிர்கால பயன்களுக்கான திட்டமிடல்களை உருவாககவும் தவறவில்லை. அதன் விளைவுதான் அமெரிக்காவை வரவழைத்தது. எந்த ஒரு யுத்த களத்திலும போரிடும் இருதரப்பினரும் படைச் சமநிலையில் இருக்கும் போதுதான் யுத்த நிறுத்தம் நீடிக்கும்.




## விசனம் தரும் ஒப்பந்தங்கள்

எந்தத் தரப்பாவது படைநிலையை அதிகரித்தால் யுத்த நிறுத்தம் கேள்விக்குறியாகி விடும். இது தான் யதார்த்தம். இதனால் இந்தியா-இலங்கை இராணுவ ஒப்பந்தம் கடும் விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே இந்து சமுத்திரப் பகுதியில் டியாகோ கார்சியா தீவில் இந்தியாவின் தெற்குப் பகுதியிலிருந்து 1500 கி.மீ. தொலைவில் 1970இன் தொடக்கத்திலிருந்து தன்னை கால் பதித்தது அமெரிக்கா. (இந்து சமுத்திரத்தில் உள்ள இந்தத் தீவு ஆழிப்பேரலையில் தப்பியிருக்கிறது. இங்கு இருக்கும் அமெரிக்காவின் அதிநவீன கருவிகளுக்கு ஆழிப்பேரலை தெரியாமல் இருநததா? அதன் அருகாமையில் உள்ள மாலைதீவு மற்றும் இந்தியாவுக்கு ஏன் தெரிவிக்காமல் இருந்தது? சாகட்டும் பார்க்கலாம் என்பதுதானே நோக்கம்.) இந்தியாவில் ஒற்றையாட்சியும் வலுவான அரசியல் தலைவர்களும் இருந்த காலத்தில் கூட இலங்கை அரசு, இந்திய அரசுக்கு எதிராக பாகிஸ்தானுடனும் அமெரிக்காவுடனும் நட்புப் பாராட்டியே வந்தது.

ஆழிப்பேரலைக்கு முன்பாக தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் நாள் உரையில் இலங்கை அரசின் தற்போதைய இழுத்தடிப்பு நடவடிக்கைகளால் தமிழர்கள் மீண்டும் விடுதலைப் போரைத் தொடங்க வேண்டிய நிலை ஏற்படும் என்று எச்சரித்திருந்தார். இதில ஆடித்தான் போய் இருந்தது சந்திரிகா தரப்பு. ஆழிப்பேரலை வந்தவுடன் சந்திரிகா வெளியிட்ட அறிக்கையில், அப்பாடா புலிகளால் வந்த பேராபத்து இப்போதைக்கு இல்லை என்பதை ஒளிவுமறைவின்றித் தெரிவித்திருந்தார்.

இன எதிர்காலத்தில் தமிழீழ விடுதலைப புலிகள் தொடங்கப் போகும் அமைதிப் பேச்சுகளில் சிங்களப் பிரதிநிதிகள் மேசைகளில் அமர்ந்திருக்கலாம். அவர்கள் மறைந்து இருப்பது அமெரிக்க படையினருக்குப் பின்னால் என்பதை நினைவுபடுத்தி தமிழர்களின் கோரிக்கைகளை நீர்த்துபோக வைக்கலாம் என்பதே சிங்கள அரசின் எண்ணம். இதை வெளிப்படுத்தும் விதமாகத்தான் தமிழர் பகுதிகளான யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைப் பகுதிகளில் அமெரிக்க இராணுவத்தைக் குவித்திருக்கிறது சிங்கள அரசு.

இந்த பகுதிகளில் முகாமிட அமெரிக்கா கொண்டு வந்திருக்கிறது சக்தி வாய்ந்த உளவு செயற்கைக் கோள்களை. The National Geo-spatial Intelligence Agency என்ற NGA அமைப்பு இந்த சாதனத்தை அளித்துள்ளது. மீட்புப் பணிகளுக்குச் செல்லும் அமெரிக்க இராணுவத்தினருக்கு அளிக்கப்படும் இந்த செயற்கைக்கோள் முக்கியமாகக் கண்டுபிடித்துக் கொடுப்பது எதைத் தெரியுமா? 'இராணுவ நிலைகளையும் இரகசியமாக பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் ஆயுதக் கிடங்குகளையுமாம்'. மீட்புப் பணிகுச் செல்லும் சாக்கில் இந்த உளவு சாதனங்களை அமெரிக்கா கொண்டு செல்வதும வழமையாம். இராணுவ நிலைகளையும் ரகசிய ஆயுதங்களையும் அறிந்து தரும் இந்த சாதனம், மீட்புப்பண மேற்கொள்ளும் நாடுகளில் முதன்மையான போக்குவரத்துக் கட்டமைப்பையும் பதிவு செய்து கொள்ளுமாம்.

## அமெரிக்காவின் உள்நோக்கம் ஆட்சியாளர்களுக்குப் புரியவில்லையா?

இலங்கைத் தீவகத்தில் தமிழ்-சிங்கள-இஸ்லாமிய மூவின மக்களும் அமெரிக்காவின் உள்நோக்கத்தைத் தெளிவாகவே புரிந்துகொண்டு இருக்கின்றனர்- ஆட்சியாளர்களைத் தவிர. தமிழீழத்தில் மட்டுமல்ல. இந்தியாவின் தென் பகுதி தமிழ்நாட்டிலும் அதன் கரம் நீளாமலா போகும்? கூட்டு கடல் ரோந்து, கூட்டு பாதுகாப்பு என்று தமிழர்களின் கடல்பகுதியில் அமெரிக்க இராணுவம் இறங்கிவிட்டால் பிறகு என்ன? இந்தியாவிற்குள்ளும் அமெரிக்கா வந்தது போல் தான். ஆழிப்பேரலையில் மொத்த கடல் வளத்தையும் இழந்துபோய்விட்ட தமிழன், சிங்கள இராணுவ துப்பாக்கிச் சூடுகளுக்குப் பலியாகிக் கொண்டிருந்த தமிழ்நாட்டுத் தமிழன் இனி அமெரிக்க இராணுவச் சூட்டுக்கு அநியாயமாகப் பலியாகிடும் காலம் மிக அண்மையில்தான் போல.

ஒவ்வொரு நாட்டினது வெளியுறவுக் கொள்கை என்பது அப்படியே நிரந்தரமாக வைத துக்கொண்டிருப்பது அல்ல. சூழல்களுக்கேற்ப மாற்றப்பட வேண்டியவையே. அரசியல் சாசனங்களிலேயே எத்தனையோ திருத்தங்களை மேற்கொண்டுவிட்ட இந்திய அரசு இலங்கைத் தீவகம் தொடர்பான தனது வெளியுறவுக் கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசிய அவசர சூழல் இது. இந்திய விடுதலைக் காலத்திலிருந்து இந்தியாவின் பல்வேறு முக்கிய சூழல்களில் தொடர்ந்து துரோகம் இழைத்து வருகிறது இலங்கை. 1950களில் இலங்கையின் பிரதமராக இருந்த சேர்.ஜோன் கொத்தலாவல ஆட்சிக் காலமாகட்டும் சரி,

1960களில் இந்திய-சீன யுத்த காலத்திலிருந்த இலங்கை அரசாகட்டும் சரி, 1970களில் வங்கதேசத்திற்கான இந்திய-பாகிஸ்தானிய யுத்த காலமாகட்டும் சரி இந்தியாவிற்கு துரோகமிழைத்த வரலாற்றையே இலங்கை தொடர்ந்து செய்திருக்கிறது. அதேநேரத்தில் தமிழீழத் தமிழர்கள் இந்தியாவை நேசமிகு நாடாகவே பார்த்து வந்துள்ள வரலாறு மறக்கப்பட முடியாதது. இந்திய-சீன யுத்த காலத்தில் இலங்கை அரசின் நிலையைக் கண்டித்து இந்தியாவுக்காக சீனாவுடன் போரிட தொண்டர் படையை அனுப்புவோம் என்று பிரகடனம் செய்தவர் தந்தை செல்வா. இந்திரா அம்மையாரும் மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆரும் தங்கள காலத்தில் தமிழீழத் தமிழர்களுக்காக செய்த பேருதவிகள் மறக்க முடியாதவை.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், அண்மைய அமைதிப் பேச்சுகளில் தந்தையர் நாடாகிய இந்தியா உயரிய பங்களிப்

**-சேரமான்-**

பைச் செய்யவேண்டும் என்று வலியுறுத்தினர். கொள்கை வகுப்பாளர்களின் பிழையான நடவடிக்கையால் ஏற்பட்ட நிகழ்வுகள் அனைத்தையும் மறந்து விட்டு-இந்தியாவன் எதிர்கால நலனுக்காக தமிழ்நாடு மற்றும் தமிழீழத் தமிழர் களின் நலனுக்காக முன்னாள் பிரதமர் இந்திரா காலத்தில இந்திய மத்திய அரசு மேற்கொண்ட இலங்கைத் தீவகம் தொடர்பான வெளியுறவுக் கொளகையை உடனடியாக அறிவிக்க வேண்டியது இந்திய அரசின கடமை. இப்போது இந்திய அரசில் அங்கம் வகிக்கும் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் இதை வலியுறுத்த வேண்டியது வரலாற்றுக் கடமை. இந்திராவின் வாரிசுகளாக மத்தியில் ஆட்சி அமைத்திருப்பவர்களுக்கு இது ஒன்றும் பெரிய விடயமும் அல்ல- தமிழீழ விடுதலைப் போருக்கான ஆதரவுக்களத்தை உருவாக்கியதில் பங்காற்ற இன்று மத்திய அரசின் கூட்டாளகளாக இருக்கும் தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. போன்ற கட்சிகளுக்கும் இது ஒரு பெரிய விடயமும் அல்ல.

(இணையப்பார்வை)

# பொங்கு தமிழர்களாக பொங்கி எழுவோம்!

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு

பல்வேறு அடக்குமுறைக் கரங்களின் பிடியின் மத்தியில் இருந்தும், தமது அபிலாசைகளை உலகத்தின் காதுகளுக்கு உரத்த குரலில் ஒலித்த குரல் தான் பொங்கு தமிழ். இவ்வாறு யாழ. பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வின் 4ஆவது ஆண்டு நிறைவு நாளை ஒட்டி விடுத்திருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழப்பாணம 'இராணுவப் பிடியினுள் அகப்பட்ட போது, தமிழ் மக்கள் பல்வேறுபட்ட வகையில் இராணுவக் கெடுபிடிகளை எதிர்நோக்கி சொல்லொணா சோகவடுக்களை சுமந்தவர்களாகவே எமது மக்கள் வாழ்க்கையைத் தொடர்நதார்கள். திறந்த சிறைச்சாலை போன்ற அன்றைய யாழ்ப்பாணம் காணப்பட்டது. இவ்வாறான நிலையில் தான் தமிழ் மக்களின் உணர்வுகளையும், தமிழ் மக்கள் அடக்குமுறைக்கு எதிரான தமது உணர்வுகளைக் காட்டவேண்டும் என்ற எண்ணக் கரு தோற்றம் பெற்றது. அதுவே 17.01.2001 பொங்கு தமிழாகப் பரிமாணம் பெற்றது.

தமிழர்களை எல்லாம் ஒன்றுபட வைத்து தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் என்று பேரினவாத அரசாங்கத்திற்கும் உலக நாடுகளுக்கும் எடுத்துக்காட்டியது இப்பொங்கு தமிழே! இன்று எமது தாயகப் பகுதிகளில தமிழர்கள் எல்லாம் ஒன்றுபட்டு எழுச்சி கொண்டு ஓரணியாக இலட்சியத்திற்கான எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு பலம் சேர்க்கும் அணியாக இருப்பதற்கு பொங்கு தமிழ் என்ற ஒன்றே பிரதானமாக அமைந்தது.

இன்று ஒரு நீண்ட போரில்லாத சமாதானத் தென்றல் வீசுவதற்கும், ஒவ்வொரு தமிழனின் ஆன்மாவும் சிந்திக்கும்படி சிந்தனையை ஏற்படுத்தியதும், சிங்கள இனவெறி பிடித்த பெரும்பான்மை அரசால் தமிழ் மக்களின் உண்மையான உணர்வுகளை அடக்கமுடியாது என்பதனையும், உரத்தகுரலில் ஒருமித்தவாறு எடுத்துக்காட்டிய நிகழ்வுதான் பொங்கு தமிழ.

தமிழ் மக்கள் மீது எப்போது அடக்குமுறைகள் திணிககப்படுகின்றதோ! தமிழர்களுக்கு எப்போது எல்லாம் அநிதிகள் இழைககப்படுகின்றதோ! அப்போதெல்லாம் தமிழர்கள ஆகிய நாம் பொங்கி எழுவோம. "பொங்கிய தமிழர்கள் சோர்ந்து போகமாட்டார்கள். மீண்டும் மீண்டும் பொங்கி எழுவார்கள்.

உரிமைகள் வென்றேடுககப்படும்வரை எமக்கு நீதியானதும, நிலையானதும் ஓர் தீர்வு கிடைக்கும்வரை பொங்கி எழுவோம்.

சுனாமி என்கின்ற கடல் கோள் இயற்கை அனர்த்தத்தினால் எமது மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இப்பொங்கு தமிழ் நிகழ்வு பெருமெடுப்பில் முன்னெடுக்கப்படாத போதும், 17.01.2005அன்று காலை 10.00 மணிக்கு பொங்கு தமிழ நான்காம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு இடம்பெற இருக்கின்றது. இந்நிகழ்வில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பாடசாலை மாணவப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக சமூகத்தினர் ஆகியோரைக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம். (ப)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு காலாவதியான மருந்தா?

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் சுகாதார நடவடிக்கை தொடர்பில் சுகாதார அமைச்சு உரிய கண்காணிப்பை மேற்கொள்ளவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் மருந்துப் பொருட்களுடன், காலாவதியான மருந்துப் பொருட்களும் கலந்திருப்பதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்திய கலாநிதி துமிந்த தேரர் தெரிவித்துள்ளார்.

காலாவதியான மருந்துப் பொருட்கள் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு வழங்கப்படுவதை தடுக்க சுகாதார அமைச்சு உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ற-9)

## சுனாமி அள்ளிச் சென்ற ஆயுதங்களை மீட்கும் பணிகளில் படையினர் தீவிரம்

சுனாமி கடல் கொந்தளிப்பின்போது மூழ்கிப்போன தமது படைத் தளங்களிலிருந்து காணாமல்போன ஆயுத தளபாடங்களை மீட்பதற்காகப் படைத்தரப்பு முழு மூச்சில் தேடுதல் வேட்டையினை மேற்கொண்டுள்ளது. வடமராட்சி கிழக்கின் மணற்காடு மற்றும் குடத்தனை கரையோரக் கிராமப் பகுதிகளிலேயே நூற்றுக்கணக்கான படையினர் இத்தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கின் கரையோர கிராமமான மணற்காட்டின் பொற்பதி பிரதேசத்திலும், குடத்தனையின் கரைப்பகுதியிலும் இராணுவ, கடற்படை தளங்கள் பாரிய அளவில் நிறுவப்பட்டிருந்தன. அங்கு ஆயிரக்கணக்கான படையினரும் கடமையிலடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்நிலையில் அண்மைய சுனாமி கடல் கொந்தளிப்பின் போது இத்தளங்கள் கடல்நீரால் மூழ்கடிக்கப்பட்டதுடன், முற்றாக அழிவுக்குள்ளாகின. அங்கு தங்கியிருந்த படையினர் பலரும் உயிரிழந்திருந்ததுடன், பெருமளவிலானோர் காயமடைந்துமிருந்தனர்.

இறந்த மற்றும் காயமடைந்த படையினர் மீட்கப்பட்டிருந்த போதும் ஆயுத தளபாடங்கள் மீட்கப்படவில்லை. எனினும் தற்போது அப்பகுதிக்கு மக்கள் செல்லத் தடைசெய்யப்பட்டு, நூற்றுக்கணக்கான படையினர் குவிக்கப்பட்டு தேடுதல் வேட்டை இடம்பெற்று வருகின்றது.

பெரும்பாலும் கடல்நீர் இத்தளப்பகுதியெங்கும் தேங்கியுள்ள நிலையில், படையினர் கூரிய ஆயுதங்களைக் கொண்டு கீழ்ப்பகுதியினுள் தேடுதல் மேற்கொண்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. (ப)

## அரசின் செயற்றிட்டம் இன்று அறிவிப்பு

ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் செயற்றிட்டம் இன்று அறிவிக்கப்படவிருக்கின்றது.

இன்று நடைபெறும் அனர்தத முகாமைத்துவ செயலணிக்கூட்டத்தில் இந்தத்திட்டத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிடுவார்.

துறைசார் நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட இத்திட்டம் விபரமாக ஆராயப்பட்டது. ஜனாதிபதியின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் இத்திட்டம் இன்று வெளியிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற-4)

## மட்டு .மாவட்டத்தில் 2836பேர் வரை பலி!

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று வரை கிடைத்த தகவலின்படி 2ஆயிரத்து 836 பேர் உயிரிழந்துள்ளதாகவும், ஆயிரத்து 027பேர் காணாமல் போயுள்ளதாகவும் சுனாமி அனர்த்த தகவல் மையத்தின் பேச்சாளர் ஆர். நெடுஞ்செழிய்ன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் இதுவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் 63ஆயிரத்து 717 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

12ஆயிரத்து 448 குடும்பங்கள் இடம்பெயர்ந்து தற்போது 56 முகாம்களில் தங்கவைக்கப்படடுள்ளனர். 2ஆயிரத்து 375 பேர் காயமுறறுள்ளனர் எனக் குறிப்பிட்ட நெடுஞ்செழியன் 15ஆயிரத்து 939 வீடுகள முழுமையாகவும், 5ஆயிரத்து 665 வீடுகள பகுதியாகவும் சேதமடைதுள்ளதாகவும் குறிப்பிட்டார். (பூ)

## இந்து ஆலயங்கள் எதுவும் தத்தெடுக்க முன்வரவில்லை

ஆழிப்பேரலையின் கொடூரத்திற்கு பல குழந்தைகள் தங்கள உற்றார் உறவினர்களை இழந்து அனாதைகளாகி இருப்பதனால், அவ்வாறு பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து 100 குழந்தைகளைத் தத்தெடுப்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்திருப்பதாக தலதா மாளிகை ஆலய நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி •தியவதன நிலமே நிரஞ்சன் விஜேயரட்ண கூறியுள்ளதாவது:

தத்தெடுத்தலுக்கான வழிமுறைகள் பற்றி மத்திய மாகாண அரச அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

இவவாறு தத்தெடுக்கும் குழந்தைகளின் அனைத்து செலவுகளையும் தலதா மாளிகையே பொறுப்பெடுக்கும்.

இவவாறானதொரு மனிதாபிமான செயலை முன்னெடுக்க எந்தவொரு இந்து ஆலயமும் இதுவரை முன்வரவில்லை என்பது மிகவும் வருத்தமளிப்பதாகவே உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## எதிர்க்கட்சித் தலைவர் மாத்தறைக்கு விஜயம்

சுனாமி பேரலையினால் பாதிப்படைந்த மாத்தறை மாவட்டத்தைப் பர்வையிட எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மூன்றாவது முறையாக நேறறு முன்தினம் அங்கு விஜயம் செய்தார்.

இவவிஜயம் குறித்து ஊடகவியலாளர் மத்தியில் ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக்கட்சி எதிர்வரும் சுதந்திரதினத்தை முன்னிட்டு எந்தவிதமான கொண்டாட்டங்களையும் நடாத்தப்போவதில்லை. இந்நிகழ்வுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மற்றும் மனித வளங்களை மாத்தறை மாவட்ட மக்களின் மேம்பாட்டுக்காக, குறிப்பாகப் பாதிப்படைந்த நிலையில் உள்ள வடுகளைப் புனரமைக்கும நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்படும் எனக் குறிப்பிட்டார். (ற-4)

## உரிய நிவாரணம் வழங்கக் கோரி திருமலை மீனவர்கள் வீதிமறியல்

(திருகோணமலை)

திருகோணமலை நகரை அடுத்துள்ள கள்ளத்தோட்டம் கிராமம் மற்றும் அதனை அடுத்துள்ள பகுதிகளில் வாழும் மீனவக குடும்பங்கள் தமக்கான நிவாரண உதவிகள் உரிய முறையில் வழங்கப்படவேண்டும், வீடுகளை இழந்தோருக்கு தற்காலிக கூடாரங்களையாவது உடனடியாக அமைத்துத் தரவேண்டும், மீன்பிடிப்பதற்கான தொழில்சார் உபகரணங்களை வழங்க அரசும், அரசசாபற்ற நிறுவனங்களும் முன்வர வேண்டும் எனக் கோரி நேற்று முன்தினம் பிற்பகல் மூன்று மணிவரை வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வீதி மறியல் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும், குழந்தைகளும் கலந்துகொண்டனர்.

பிற்பகல் 3மணியளவில் அங்கு சென்ற உயர்மட பொலிஸ் அதிகாரிகள வீதிமறியல் போராட்டத்தை மேற்கொண்டிருந்தவர்களுடன், போராட்டத்தைக் கைவிட்டு வீதியோரத்தில் அமர்ந்திருக்குமாறும், பிரச்சினைகளுக்கான முடிவினை உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதாகவும் தெரிவித்தனர்.

பிற்பகல் 6.00 மணியளவில் சம்பவ இடத்தைச் சென்றடைந்த பிரதேச செயலக அதிகாரிகள் இவர்களுக்கான உலர் உணவுப் பொருட்களை உடனடியாக வழங்குவதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து இவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டனர். (இ-4)

## 80% மீன்பிடிப் படகுகள் கடல் அனர்த்தத்தால் அழிவு

(கொழும்பு)

இலங்கையின் கரையோரத்தைக் கடுமையாகத் தாக்கிய சுனாமி இராட்சத அலையால் 80 சதவீதமான மீன்பிடிப்படகுகள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் இதனை மீண்டும் கட்டியெழுப்ப பல வருடங்கள் ஆகும என்றும் ஐக்கியநாடுகள் சபை தெரிவித்துள்ளது.

புள்ளி விபரங்களின்படி இலங்கையில் 18ஆயிரதது 500 மனபிடிக் கலங்கள் சேதமடைர்தோ அல்லது காணாமல்போயோ உள்ளன. 30ஆயிரத்து 800போ இறந்துள்ளதாகத் தெரியவருகிறது.

மேற்படி புள்ளிவிபரத்தை வெளியிட்ட இலங்கைக்கான ஐ.நா.பிரதிநிதி,

மீனவர்களின் சேதமடைந்த உபகரணஙகளைத் திருத்திக் கொடுக்கும் பணிகளை ஐ.நா. விரைவில் நடைமுறைப்படுத்த விருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, 1500 மீனவர்கள் கொல்லப்பட்டும் 5ஆயிரத்து 600பேர் காணாமல் போயுமுள்ளனர். 90ஆயிரம்பேர் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களிலோ அல்லது நண்பர் உறவினர் வீடுகளிலேயோ உள்ளனர்.

மிகக் குறைந்தளவிலான மீனவர்களே மீணடும் மீன்பிடிப்பதற்காகக் கடலுக்குச் செல்கின்றனர். எனினும் மீன் உணவு நுகர்வு மிகக்குறைவாகவே இருப்பதால் இவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகின்றனர்.

இந்நிலையில் மீன் உண்பது ஆபத்து இல்லையென உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. (ற-6)

## கொடுப்பனவு வழங்கல்

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் இதுவரையும் மீளகுடியமர்வுக் கொடுபனவுகளைப் பெற்றிராத மக்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இக் கொடுப்பனவுகளுக்கு உரித்துடையோர் வங்கிகள் மூலம் அவற்றைப் பெறலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-29)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட 14 மாவட்டங்களில் அரசினால் அவசரகாலச் சட்டம் அமுல்

(கொழும்பு)

**சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 14 மாவட்டங்களில் ஜனவரி 4ஆம் திகதி முதல் அவசரகாலச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பொதுசன பாதுகாப்புச்சட்டம் இரண்டாம் பிரிவின் கீழ் (அத்தியாயம் 40) 1374/8ஆம் இலக்க விசேட வர்த்தமானி மூலமாக இந்த அவசரகால சட்டத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

கொழும்பு, கல்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மற்றும் புத்தளம் ஆகிய 14 மாவட்டங்களிலேயே இச்சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாணரப் பொருட்கள் விநியோகம் சீராக நடைபெற வழிசெய்யும் பொருட்டு பாதுகாப்புப் படைகளின் சுமுக நடமாட்டத்துக்கு ஏதுவாகவே இச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந-9)

# அவசரகால பிரகடனத்தின் எதிரொலி

(கொழும்பு)

**சுனாமியால் பாதிக்கப்பட்ட 14 மாவட்டங்களிலும் அவசரகாலச் சட்டத்தை அரசு அமுல்படுத்தியுள்ளமைக்கு பல்வேறு அமைப்புக்களும், அரசியல் கட்சிகளும் தமது ஆட்சேபங்களையும் கண்டனங்களையும் வெளியிட்டுள்ளதுடன், இச்சட்டத்தை நீக்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளன.**

இதற்கமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி மற்றும் சிவில் உரிமைகள் இயக்கம் என்பன வெளியிட்டுள்ள கண்டனங்கள் வருமாறு:-

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடககு-கிழக்கு உட்பட நாட்டில் சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் அரசாங்கம் அவசரகாலச்சட்டத்தை அமுல்படுத்தியுள்ளது.

இந்த நடவடிக்கையானது வடக்கு-கிழக்கைப் பொறுத்தமட்டில் மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், தமிழ் மக்களுக்குக் கிடைக்கும் நிவாரண உதவிகளைத் தடுக்கும் செயற்பாடகவே கருத வேண்டியுளளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

அவசரகாலச் சட்ட அமுலாக்கமானது தமிழ் பேசும் மக்களின் மத்தியில் அனாவசியமான பீதியை ஏற்படுத்தும் முயற்சியாகவே அமையும் என விசனம் தெரிவித்துள்ள கூட்டமைப்பு, கிழக்குப் பகுதிக்கான அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் வாபஸ் பெற வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது.

கூட்டமைப்பின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

தாய், தந்தை சிறுவர், சிறுமியர்கள், தொடர்ந்தும் கடத்தப்பட்டு வருகின்றனர். அதனைத் தடுக்கும் நோக்கல் அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியிருக்கலாம்.

ஆனால் சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய அவசியமில்லை.

குறிப்பாக வடககு-கிழக்கு பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. இராணுவத்தினரும் விசேட அதிரடிப்படையினரும் நிவாரணப் பொருட்களைக்கொண்டு செலவோரையும், வாகனங்களையும், தேவையின்றிச் சோததனையிடுகின்றனர்.

கிழக்கு மாகாண அகதி முகாம்கள் சிலவற்றை விசேட அதிரடிப்படையினர் பொறுப்பேற்று நிவாரணங்களை வழங்கி வருவதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த நிலையில், அவசரகாலச் சட்டமும் அமுல்படுத்தப்பட்டுள்ளதனால் இராணுவத்தினர் அதைப் பயன்படுத்தி மேலும் பல கெடுபிடிகளை மேற்கொள்ளும் வாய்ப்புக்கள் உள்ளன.

அவசரகாலச் சட்டம் முன்னர் அமுலில் இருந்த போது அந்தச் சட்டத்தினால் பல்வேறு துயரங்களை தமிழ் மக்கள் அனுபவித்திருந்தார்கள். அரசும்-புலிகளும் செய்து கொண்ட உடன்படிக்கையின் பின்னர்தான் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது. சுனாமி பேரலையைக் காரணம் காட்டி மீண்டும் தமிழ் பிரதேசங்களில் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவது அனாவசியமானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

## மலையக மக்கள் முன்னணி

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியிருப்பது வடக்கு-கிழக்கு சிறுபான்மை தமிழ் மக்களுக்கு தனனிச்சையாக உதவி வழங்குபவர்களைக் கட்டுப்படுத்துவதாக அமையுமென மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டுள்ள சகலருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்ற சிந்தனை நாட்டு மக்கள் அனைவருக்கும் மேலோங்கி நிற்கின்ற இவ்வேளையில், அவசரகாலச் சட்டப் பிரகடனத்துக்கு அவசியம் என்ன ஏற்பட்டது? என்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசினால் வழங்கப்படும் நிவாரண உதவிகள் தென்பகுதியில் கூட கட்சிப் பாரபட்சத்துடனேயே பகிர்நதளிக்கப்படுவதாக விமர்சிக்கப்படுகின்ற இந்த நிலையில, வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களுக்கு அரசின் நிவாரண உதவிகள் போதுமானளவில் கிடைக்கவில்லை என்பதும் முக்கியமானதொரு குற்றச்சாட்டாகும்.

அரச சார்பற்ற அமைப்புக்கள்கூட வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கு உதவி வழங்க முற்படும் போது அரச படைகளாலும், அரச பிரதிநிதிகளாலும் பல கெடுபிடிகளைச் சந்திக்க நேர்ந்திருக்கின்றது என்பது ஏற்கனவே ஊடகங்கள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

இந்தக் கெடுபிடிகளை மேலும் அதிகப்படுத்துவதாகவே இந்தச சட்டம் அமையும் என்பதே எல்லோருடைய கருத்தாகும். இந்த இக்கடடான நேரத்தில் எந்தத் தடையுமின்றி நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைப்பதற்கு சாத்தியமாக சகல வாய்ப்புக்களையும் ஏற்படுத்த வேண்டிய அரசாங்கம், அவசரகாலச் சடடத்தைப் பிரகடனப்படுத்துவது ஏன் என்பது புரியாத புதிராக உள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் பேசும் பிரதேசங்களுக்கு வெளிநாட்டு முக்கியஸ்தர்கள் விஜயம் செய்வதைத் திட்டமிட்டு அரசு தடுக்கின்ற இந்த நிலையில், உள்நாட்டில் உள்ளவர்கள்கூட இந்தப் பிரதேசத்துக்குச் செல்வதைத் தடுக்க இந்தச் சட்டம் அமைந்துவிடுவதற்கான வாய்ப்பே அதிகமாகவுள்ளது.

இதனால், பாதிப்படையப்போவது சிறுபான்மை மக்களே. பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேறு வகையில் பாதிப்பு ஏற்படாமல் தடுப்பதற்கு நடைமுறையில் உள்ள சாதாரண சட்டங்களே போதுமானதாகும்.

எனவே, இநதச் சட்டத்தை உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும என்பதே மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடாகும்.

அத்துடன், இந்தச் சட்டத்தை எதிர்ப்பதற்கு வடக்கு-கிழக்கில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, பாராளுமன்றத்தில் பிரதிநிதிகளாக உள்ள அனைத்து சிறுபான்மை இனத்தவர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் சந்திரசேகரன் மேலும் தெரிவித்தார்.

## சிவில் உரிமைகள் இயக்கம்

அரசினால அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டம் குறித்து, முன் கூட்டியே அரசு அறிவிக்கத் தவறியமைக்கு சிவில் உரிமைகள் இயக்கம் கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி இயக்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் எவ்வளவு முக்கியமானவையோ, அந்த அளவிற்கு சட்டமும், ஒழுங்கும் பேணப்படுவதும் முக்கியமான ஒன்றாகும்.

எனினும், இந்த அவசரகாலச் சட்டத்தின் அடிப்படையில் இடம்பெயர்ந்த ஒருவருக்கு வழங்கப்படும் உதவுபொருட்களின் பிரகடனம் பற்றியும், அதன் பயனாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் எவை எனபதுபற்றியும் அரசு அறிவிக்காமைக்கான காரணம் என்ன என்று தெரியவில்லை.

இந்த அவசரகாலச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கைகள் குறித்து மக்கள் அறிந்துகொள்ள அரசு வழிசெய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (ந-9,4)

# ஒரு குழந்தைக்கு ஒன்பது தாய்மார்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நான்கு மாதங்களே ஆன குழந்தை ஒன்று கல்முனை மருத்துவமனையில் கடந்த 26ஆம் திகதி அனுமதிக்கப்பட்டிருந்தது.

இந்த பிஞ்சுக் குழந்தை தமக்குத்தான் சொந்தம் என்று தற்போது ஒன்பது தாய்மார் உரிமைகோரி உள்ளனர்.

இந்த ஆண்குழந்தை சேற்றினில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுளளதாகவும், குழந்தை கல்முனை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அதுபற்றிக் கேள்விப்பட்ட பிள்ளைகளை இழந்த பெண்கள் ஆஸ்பதிரிக்கு சென்று இந்தக் குழந்தையை பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்தே இக்குழந்தைக்கு ஒன்பது தாய்மார் உரிமை கோரியுள்ளனர்.

குழந்தைகளை உரிமைகோரி ஆஸ்பத்திரியில் சண்டையிட்ட பெண்களை சமாளிப்பதற்கு மருத்துவர்கள் பொலிஸாரின் உதவியை நடியுள்ளதாகத் தெரியவருகிறது. குழந்தையின் தாயார் யாா? எனறு அறிந்து கொள்வதற்காக குழந்தைக்கு மரபணுச் சோதனை நடத்தப்போவதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர். (ந)

# தாயகம் திரும்புவார்களா அமெ.இராணுவத்தினர்?

சுனாமி பேரலைகளினால் பாதிக்கப்பட்ட ஆசிய நாடுகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள தமது இராணுவத்தினரை மீண்டும் அழைக்கவுள்ளதாக அமெரிக்க பிரதிப் பாதுகாப்பு செயலாளர் போல் தெரிவித்துள்ளார்.

புனரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை அந்தந்த நாடுகளிடமே வழங்க தாம் முடிவுசெய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணப் பணிகளை வழங்குவதே அமெரிக்காவின் நோக்கமாகும்.

நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்க இராணுவத்தினரை பொறுப்புடன் மீண்டும் நாட்டுக்கு அழைத்துக்கொள்ளவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-8)

# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளர் பதவிக்கு விளையாட்டுத்துறை இளைஞர் அலுவல்கள் அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களின் ஒன்றிணைந்த சேவையின் தரம் II நிரந்தரப்பதவியில் 5வருட திருப்திகரமான சேவையையுடைய ஒருவராக இருத்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11ஆம் திகதியன்றோ அல்லது அதறகு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், விளையாட்டுத்துறை இளைஞர் அலுவல்கள் அமைச்சு, 420, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு-7" என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். மேலதிக விபரஙகளை 13.01.2004இல் வெளியான வர்த்தமானப் பத்திரிகையில் பார்வையிடலாம். (ந-119)

## மீள்பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன் 40

1. அத்திவாரம் போடப்பட்டது
2. கனகசூரியன் வரை இருந்தது
3. செண்பகப்பெருமாள் பொருதியது
4. கனகசூரியன் திரும்பப் பிடித்தது
5. சிங்கைப் பரராச செகராசசேகரங்கள் இருந்தது
6. எனவே சங்கிலி இருந்ததும் அச் சிங்கைநகரம்
7. எனவே போர்த்தர் வென்றது சிங்கை நகரம்
8. எனவே போர்த்தர் போரில் வென்றபின் மறைந்த சங்கிலி இருந்த தலைநகரம் தான் பின்னர் அழிந்து நிலமாக இருப்ப சங்கிலியத்தோப்பு என்று நாமமிட்டுப் பின்னர் வழங்கி வரும் நிலம்

எனவே ஒரே இடத்தில் ஒரே களத்தில் இருந்த தலைநர்க்கு நல்லூர் நகரென்றும் சிங்கை நகர் என்னும் இரு பெயர்கள் பேசப்பட்டுவிட்டன.

எனவே வல்லிபுரத்தில் சிங்கைநகரை வைத்து நூல் எழுதியது பிழை இவ்வளவில் கைலாயமாலை, வைபவமாலைக் கூற்றுக்கள் உண்மையா இல்லையா.

### சிங்கைநகர்ச் சுவர்

'பறங்கிக்காரர் கி.பி.1590இல் கொழும்புத்துறையிலிறங்கி நல்லூரைச் சருவிய காலையில் சிங்கைநகர் என்னுப் பெயரோடு ஓர்பெலத்த அரணிருந்ததென பாதர் குவேறேல் கூறு கின்றமை" (Conquista p 367) யா.வை.பக்68) "யாழ்ப்பாணத்தில் போர்த்தரின் இரண்டாம் படை ஏற்றம் கி.பி. 1591 இல் நடந்தது என்பர். சு.ஞா. புவிராசனின் அபசெயம் என்பதில் வண. சு.ஞா.அவர்கள் மேலும் சொல்லுவதாவது "28ஆம் திகதி அதிகாலை பறங்கியர் தம்சமய நிஷ்டைகளை முடித்துக் கொண்டு குருமார் ஆசி சொல்ல எழுந்து நல்லூரை நோக்கி நடத்தலும் வழியில் (யாழ்ப்பாணத்துப் பூர்வ தலைநகரின் ஞாபகார்த்தமாய்ப் போலும்) சிங்கைநகர் எனப் பெயர் தரித்த முள்வேலி அரணில் தமிழர் சத்துரு படையை வீராவசத்தோடு தாக்கிச் சமராடினர். குண்டு, அம்பு, தீக்கூண்டு கற்களின் திரள் கார்மேகம் போல் நெருங்கிப் பறங்கியர் மேல் வருஷித்துக் கொண்டிருந்தது. (யா.வை.வி.பக்.141)

இங்கே பழைய தலைநகரோடு ஒரு அரண் இருக்கவில்லை. அது ஞாபகத்துக்காகவும் கட்டப்படவுமில்லை அதுதான் பூர்வகால சிங்கை நகர்க் கோட்டையென்றறிக.

ஆதி அரசன் தலைநகர்களம் இக்கோயில்களுக்குள்ளே தான் இருந்திருக்கு. அதில் ஒருவர் பின் ஒருவராக அரசாண்டார்கள் இவர்கள் யாரேனும் வேறு எங்கும் போகவுமில்லை எங்கிருந்து வரவுமில்லை தலைநகரை எவரேனும் வேறிடத்துக்கும் மாற்றியும் அமைக்க வில்லை கனகசூரியன் மீளக் கைப்பற்றி அச்சிங்காசனத்தில் ஏறிக் கொண்டான். அவன் பரம்பரையிலே சங்கிலி இருந்தான். அப்பொழுது போர்த்தர்படை வந்தபோது மதிலிலே சிங்கைநகர் என்று எழுதப்பட்டிருந்தது. அதிலே தமிழ்ப்படையின் பெரும் போர் நிகழ்ந்தது. பீரங்கித் தாக்கல்களுக்கு மதில் நிலைநிற்க முடியவில்லை. போர்த்தர் வென்றனர். சிங்கை ஆரியர் பரம்பரை அவர்கள் கீழ்ச்சிற்றரசராய் இருந்தனர். போர்த்தர் பறங்கித் தெருவிலும் கோட்டையிலும் இருந்தனர். இக்களத்திலே ஆதிச்சிங்கை ஆரியன் ஆட்சி கி.பி.948 ஆரம்பம் செண்பகப் பெருமாள் படை 1450இல் வந்தது. போர்த்தர் வென்றது 1620 சிங்கை ஆரியன் சிற்றரசு நடந்துதும் கி.பி. 1620 இல் தொடங்கி 1658இல் போர்த்தர் ஆட்சி முடிந்தது. கி.பி. 1965 அப்பால் ஒல்லந்தர்காலம்.

### 32. சிங்கைநகர்

சிங்கையாரிய மன்னர் தலைநகரமொன்று களமுமொன்று, குலமுமொன்று ஆகக் கொண்டு பார்க்க அது நல்லூரிலிருந்ததானால் அது சிங்கையாரிய மன்னர் அரசாண்ட தலைநகரம் தான் என்று முன்னர் கண்டோம். ஆகையால் அது சிங்கைநகரம் இன்னும் என்னையெனின் கி.பி. 1450 ஆண்டு வரை சிங்கை ஆரிய அரசர்களில் பதினோராவது அரசனாகித் துணியப் பட்டுள்ள கனகசூரியவரசன்பால் செண்பகப்பெருமாள் படை எடுக்கும் வரை அரசாண்ட தலை நகரம் யாது ஆதிச்சிங்கை ஆரியன் அடியிட்ட தலைநகரா? அல்லது வேறொன்றா, அது அவ்வாதி ஆரியன் அடி இட்ட அவ்வாதித் தலைநகரே தான் எவ்வாறெனின் கனகசூரியன் அரசாட்சிக் காலத்திலே தான் அந்நிய சிங்களவனா செண்பகப்பெருமாள் படை எடுத்தானே அன்றி அவன் முன்னர் யாரேனும் அத்தலைநகர்க்குப் படை எடுத்தது கிடையாது. அச் சூரியன் வரை அவன் முன்னோர் எல்லாம் தம் நகர்க்கு யாது படை எடுப்போ அச்சம் கல வரமோ இன்றி சமாதானமாக அரசாண்டு வந்தனர். அப்படிப் படை எடுத்த செய்தி எந்த நூற்குறிப்பிலும் பேசப்படவில்லை. எக்காரணத்தை முன்னிட்டும் அவர்கள் தலைநகரை மாற்றியமைக்கவுமில்லை. எனவே கனகசூரியன் செண்பகப்பெருமாள் வரும் பொழுது இருந்த தலைநகரம் கூழங்கையாரின் கட்டிய அச்சிங்கை நகரிலேயே. எனவே செண்பகப்பெரு மாள் படை எடுத்ததும் அவன் கி.பி. 1467 ஆம் ஆண்டு வரை அரசாண்டு கொண்டிருந்த தும் அச்சிங்கை நகரிலேயே (என்னையெனின் செண்பகப்பெருமாள் வென்றதும் கனகசூரி யன் தோல்வியடைந்தோடினதும்) அவ்வொரு செண்பகப்பெருமாள் கோட்டையில் ஆகும். பராக்கிரமாபாகு காலமாகிவிட அவன் கோட்டை இராச்சியம் வகிக்கப் போக அவன் பிரதி நிதியாக இருந்த விஜயபாகு அரசாட்சியில் இருக்கத் திரும்பக் கனகசூரியன் வந்து அவனுடன் போராடி அவ்விடத்தைக் கைப்பற்றிக் கொண்டானதலால் அவன் திரும்பக் கைப்பற்றிய இடமும் சிங்கை நகராம் என்க.

### 33. சிங்கைநகரும் சிலாசனமும்

"ஏன்ஜென்ற் யாவ்னா நூலாசிரியரும் (ஏ.ஜா.பக்.46-80) யாழ்ப்பாண வைபவ விமர்சனம் எழுதிய இன்னொருவரும் தன் நூலில் (யா.வை.வி.பக் 106) ஒரு சாசனத்தை அதாவது இரு பேரும் ஒரே சாசனத்தை எடுத்துக் காட்டி இச்சிங்கை நகர் வல்லிபுரத்தில் இருந்ததென்று நிச்சயம் செய்கிறார்கள் அச்சாசனமாவது

கங்கணம் வேற் கண்ணிணையாற் காட்டினார் காமர் வளைப்
பங்கயக் கையாற் றிலதம் பாரித்தார் - பொங்கொலி நீர்ச்
சிங்கை நகராரியனைச் சேரா வனுராசர்
தங்கள் மடமாதர்கள் தாம் என்பது

ஏன் ஜென் ஜாவ்னாக்காரர் கி.பி. 1210ஆம் ஆண்டு தொடங்கி, கி.பி.1440 ஆம் ஆண்டு வரை 230 ஆண்டுகள் வல்லிபுரத்திலர் இச்சிங்கை நகர் இருந் தாகச் சொல்லுயிருக்கிறாரே ! (A.J.P 370) யாழ்ப்பாண வைபவ விமர்சனகாரர் வல்லிபுரததில் இச் சிங்கை நகர் கி.பி. 1242 ஆம் ஆண்டு தொடங்கி கி.பி. 1450 ஆம் ஆண்டு வரை 208 ஆண்டு கள் இருந்ததாகச் சொல்லியிருக்கிறாரே! (யா.வை.வி.பக்80) (தொடரும்)

## சுனாமியால் உறவிழந்த சிறுவர்கள் கடத்தப்படுவதை தடுத்து நிறுத்தக் கோரிக்கை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களை வெளிநாடுகளுக்கு கடத்திச் செல்லும் நடவடிக்கை தொடர் வதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு மற்றும் விளையாட்டு அமைச்சு ஆகியவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அனர்த்தத்தால் பெற்றோரை இழந்த அநாதரவான சிறுவர் களை தமது பிள்ளைகள் எனக் கூறி வெ்ளிநாடுகளுக்கு கடத்திச் செல்லும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளதாகவும், இந்த விடயம் குறித்து அவதானமாக இருக்குமாறு தாம் வேண்டு கோள் விடுத்துள்ளதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணைக் குழுவின் அதிகாரி தெரிவித்துள்ளார். (ப-9)

## பாதிக்கப்பட்ட மாணவர்களை தொடர்பு கொள்ளக் கோரிக்கை

### தமிழ் மாணவர் ஒன்றியம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கடல் அனர்த்தத்தினால் பாதிப்படைந்த மாணவர்களின் எதிர் காலக் கல்வி நலனை மேம்படுத்தும் பொருட்டு தமிழ் மாணவர் ஒன்றியம் சுனாமி கல்வி நிவாரணப்பணி என்னும் செயற்திட் டத்தை முன்னெடுத்தமை யாவரும் அறிந்ததே.

மேற்படி நிவாரணப்பணி மூலம் பாடசாலை கற்கை உப கரணங்கள், அப்பியாசக் கொப்பிகள், சீருடைத் துணிகள் என்பன யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பிரதேசங்களிலும் எமது ஒன்றியப் பிரதிநிதிகளினாலும் மாணவர்களாலும் சேகரிக்கப்பட்டன.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட நிதியின் மூலம் பாதிக்கப்பட்ட மாண வர்களின அத்தியாவசியத் தேவைகளையும் கல்வித் தேவைகளை யும் பூர்த்தி செய்வதற்காக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் முகாம் களில் வாழும் மாணவர்களின் கல்வித்தேவைகளை ஆராய்வதோடு அவர்களின தரவுகளையும் சேகரித்து வருகின்றனர்.

இவ் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு முகாம்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் வசிக்கும் மாணவர்களை இல155, கோவில் வீதி நல்லூர் என்னும் முகவரியில் அமைந்திருக்கும் எமது தலைமைச் செயலகத் துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். (ப)

## ஆயுர்வேத அமைச்சர் கரலியத்த முல்லைத்தீவிற்கு விஜயம்

(கொழும்பு)

சுதேச மருத்துவத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த சுனாமி யால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவை நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார். தமிழ்த் தேசியத் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோருடன் நேற்று முன்தினம் காலை ஓமந்தை சாவடி வழியாக முல்லைத்தீவுக்கு சென் றார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களை நோில சந்தித்து ஆறுதல் கூறவும் அவர்களுடைய துன்பத்தில் பங்கு கொள்ளவும் கரலியத்த பயணம் மேற்கொண்டதாக அவரது வட் டாரங்கள் தகவல் தொிவித்தன.

இதற்கிடையில் மேலும் சில அமைச்சர்கள் இன்று முல்லைத்தீவுக்கு செல்ல திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் தரைவழியாகவே அங்கு செல்லவுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவாின் ஊடாக தமது வன்னிப் பயணத்திற்கான ஏற்பாடுகளை அவர்கள் மேற்கொண்டுள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளின் அழிவுகளை பார்வையிடுவதுடன், ஏதிலிகளாக கப்பட்ட மக்களை சந்திக்கவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர். (ப-4,8)

## அமெரிக்க படைகள் விரைவில் வாபஸ்!

(கொழும்பு)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டுள்ள ஆசிய நாடுகளின் மீட்புப் பணிகளுக்காக என்று இறக்கப்பட்டுள்ள பாரிய அமெரிக்கப் படைகள் விரைவில் வெளியேறும் என்று அமொிக்க பாதுகாப்புத்துறை யின் துணைச் செயலாளர் பவுல் ஒல்ப்விட்ஸ் அறிவித்துள்ளார்.



ஆசிய நாடுகளில் குவிக்கப்பட் டுள்ள அமெரிக்கப் படைகளின் பணிகளைப் பார்வையிடுவதற் காக ஆசியப் பயணம் ஒன்றை அவர் மேற்கொண்டுள்ளார். இப் பயணத்தின் போது தாய்லாந் தின் பாங்கொங் சென்ற அவர், ஊடகவியலாளர்களிடம் இதைத் தெரி வித்தார்.

ஆழிப்பேரலைக்குப் பின் ஆசிய நாடுகளில் 15,000 படையி னர், 21 கப்பல்கள், 41 விமானங்கள், 50 உலங்குவானூர்திகளை அமெரிக்கா குவித்துள்ளது.

இந்தியா 16 ஆயிரம் படையினரையும், அவுஸ்திரேலியா 350 படையினரையும் ஆசிய நாடுகளில் குவித்துள்ளது. மொத்தம் 16 நாட்டின் படைகள் ஆசிய நாடுகளில் குவிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மார்ச் 31ஆம் திகதிக்குள் அந்நியப் படைகள் தமது நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று இந்தோனே ஷியா அறிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ப)

### உறவைத் தேடும் உள்ளம்

காகிதத்தில் கப்பல் செய்து
கடல் மீதில் ஓடவிட்டுப்
பார்த்து மகிழும் வயதில்
வெள்ளத்தில் தொலைந்துவிட்ட
உறவுகளைத் தேடும் துயரம்தான்
இதுவோ.....?

ம.சுமதி,
வதிரி.

### நீச்சல்....!

ஏரிகளில் தங்கும் நீரில்
நீச்சல் கற்கிறாயே - ஏன்
இன்னொரு சுனாமியிலருந்து
தப்பித்துக்கொள்ளவா?
நீச்சல் தெரிந்தவர்கள் கூட
தப்பிக்கமுடியவில்லையே...

ந.நிகா, உடுவில்.

### வெற்றி நிச்சயம்!

பேரலையானது ஊருக்குள் புகுந்து
பெரும்பாடு படுத்திவிட்டது
பெருமையாய் வாழந்த உன் குடும்பம்
பேரழிவைச் சந்தித்துவிட்டது
பெரும் உயிராபத்திலிருந்து தப்பி
பெரலுக்குள் புகுந்துவிட்டாய் - ஆனால்
போகுமிடம் தெரியாது தவிக்கின்றாயா?
பெரும் முயற்சிசெய் வெற்றி நிச்சயம்!

ச.சிவரூபன்,
சுன்னாகம்.

### சுனாமி

மட்டக்களப்பில் மழை வெள்ளத்தால்
மட்டில்லாக் கவலை கொண்ட
மக்கள கூட்டததிற்கு மற்றுமொறு சுனாமி
வடக்கு - கிழக்கு தெற்கில்
வந்து சீற்றங்கொண்டு
சீறி எழும்வேளை
சிறியவன் தன் உயிர்காக்க
சிறிய வள்ளமதில் கரைநோக்கி
சிறியதன் கரங்களின் உதவியோடு...
சக்கிரம் வெளியே வா வா
உதவிட பலகரங்கள் உண்டு.

த.நா.பிள்ளையார்,
மூளாய்.

## மௌனத்தின் தேடல்கள் - 43



### விரைந்து வா!

அனர்த்தம் அழைத்த
உறவினைத் தேட
நீயும் முயற்சிக்கிறாயோ
கரைதனில் பிணங்களை
இனங்காட்ட
உனைத் தேடுகிறார்கள்
விரைந்து கரை வா...!

S.விதுஷன்,
வண்ணைய,ர்.

### துணிவு!

பள்ளி செல்லும்
பச்சிளங் குழந்தையே
நீச்சல் பழகத் துடிக்கிறாயே!
- ஏன்
இனிவரும் புதியதோர்
இராட்சத சுனாமியை - நீயும்
எதிர்கொள்ளத் துணிந்தாயா?
- பாவம்
நசசல் தொந்தவாகளும் - அந்த
சுனாமிக்கு பலியாகியதை
அறியாத பாவியாகிவிட்டாயே!

பா.பபி,
கரவெட்டி.

### ஊர் முழுதும் ஓலமடா!

சுனாமி அலை அடித்து
சுற்றமெல்லாம் சுவகரித்து - அடுத்து
படகொன்று உனக்கு ஆக்கி
பாலகனே பாதை வகுத்திருக்கு
வாழ்க்கையில் நீ நச்சலிட
வருவாய் ந கரையோரம்
உன்போல் பலர் இங்கு
உறவு தேடி அலைமோத
உள்ளமெல்லாம் உருகுதடா
உயிர்கள் இங்கே தவிக்குதடா
யார் செய்த பாவமடா
ஊர் முழுதும் ஓலமடா!

பி.கணேசலிங்கம்,
உரும்பிராய்.

## மௌனத்தின் தேடல்கள் -45



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வுகளை **மிகச் சிறிய** கவிதைகளாக்கித் **தபால் அட்டையில்** வலம்புரி - சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள். ***கிடைக்கவேண்டிய இறுதித் திகதி*** - 23.01.2005

அனுப்பவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள்- 45
**வலம்புரி - சங்குநாதம்**
15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்

### தயக்கம்



பெண்ணுக்குத் தேவை தன்மானம்
ஆணுக்குத் தேவை தீர்மானம்
ஏழைக்குத் தேவை அன்னதானம்
எல்லோருக்கும் தேவை சமாதானம்
சூரியன் தயங்கினாலும் தாமரை மலருமா?
கரை தயங்கினால் அலை அடிக்குமா?
வானம் தயங்கினால் நிலவு தோன்றுமா?
சமாதானம் தயங்கினால்
சந்தோசம் கிடைக்குமா?

*ம.சர்மிளா, ஊர்காவற்றுறை.*

### கிருபையுரி...!

புத்தாண்டுப் பரிசுதந்த
ப,வையே உந்தனுக்கு
செத்தாலும் உனைமறவா
சிந்தையனின் அன்புமடல்
கட்டையிலே வெந்தாலும்
கலங்காது கமலமனம்
என்றுரைத்தர் காரிகையே!
இன்று நான் நிஷ்டையிலே
இருந்துதான் நினைக்கிறேன்
உன் நினைவை
கோடி கொடுத்தாலும்
கோமகளே உனைமறவேன்
ப,பதியாய் நீ இருக்க
புண்ணியனை வேண்டுகிறேன்
ஆண்டவனே போதும் எனை
ஆட்டிப்படைத்ததெல்லாம்
புத்தாண்டுப் பிறப்புடன்
மேன்மையுடன் கிருபைபுரி...!

வினோ - துரை
பளை.

### தருவாயா...?



கலைகின்ற மேகம்போல்
அலைகின்ற எம் வாழ்வு
மாறவேண்டும் - உயிர்
களைகின்ற கண்ணிவெடி- எம்
விளைநிலங்களில் இன்றி
போகவேண்டும் - இங்கு
விழுதூன்றி யெம்மினம்
வளர்ந்தோங்க வேண்டும் - இனியும்
தொழுதுண்டு வாழும் நிலையது
அள்ளுண்டு போகவேண்டும் - நாளும்
முகிழ்க்கும் புது முளைகள்
மகிழ்வில் முகம் மலரவேண்டும் - நாளை
எழுந்து நின்று இயற்கையும்
வாழ்த்துப் பாடி நிற்கவேண்டும்
பெரும் பகை யகன்றங்கு
இவையெல்லாம் கிடைத்திட
தைப்பொங்கலே
வரமொன்று தருவாயா?



நெற்கொழு தாசன்,
நெற்கொழு.

### கனவு மெய்ப்படவேண்டும்!



பிஞ்சுப் பருவத்தில் பேப்பரில்
படகுவிடக் கனாக்கண்டேன்!
கற்றிடும் வயதில்
கணித மேதையாக
கனாக்கண்டேன்!
கன்னியாய் இருக்கையில்
கட்டிளம் காளையை
கைப்பிடிக்கக் கனாக்கண்டேன்!
செவ்வாய்க் குற்றமாம்
கண்ட கனவெல்லாம்
[illegible]ற்றினில் கலந்திட
காலமெல்லாம் கன்னியாய்
கழித்திட [illegible]ண்டியதாயிற்றே!!

ச.சிவரூபன், சுன்னாகம்.

### இனியாவது நாம் அமைதியில்....

ஓ...
நீ - இப்போது
தூங்குகின்றாயா? தூங்கு
நன்றாகத் தூங்கு
பல்லாயிரம் உறவுகளை எம்மிடத்து
பறித்தெடுத்த சந்தோஷத்தில் நீ உறங்க
உறவுகளினைப் பிரிந்த வலியில்
ஊறக்கம் தொலைநத விழிகளோடு - நாம்
கொடுத்ததும் - நீதான்
அதை தட்டிப்பறித்ததும் நீதான்
அன்னை பார்த்திருக்க பாலனையும்
பாலன் நேசித்திருந்த உறவுகளையும் - ஏன்
நீ பறித்தெடுத்தாய் - எம்
முகமறிந்த நாட் தொடக்கம் எம் முகவரி
நீயாகிப்போனதால் - இப்போது
நாங்கள் முகவரி இழந்த
அனாதைகளாய்...
உனக்கு தெரியுமா?
இப்போதெல்லாம் - நான்
நீரைக் குடிப்பதுமில்லை
குளிப்பதுமில்லை - ரசிப்பது
கூட இல்லை - தவறேதும் புரியாமல்
தண்டனைக் கைதிகளாய்
வாழ்க்கைச் சிறையில்
நாமிருக்க!
ஓ.....!
நீ தூங்குகின்றாயா? தூங்கு
இனியாவது நாம் அமைதியில்......

கு.தாட்ஷாயினி,கலட்டி.

### நமக்கு மேலே ஓர் சக்தி

சுனாமி கடல் அலையே
சும்மா பிதற்றாதே
உலகையே அழித்தேனென்று
அணுகுண்டு வீசினோம்
அவுட் ஐந்து இலட்சம்

யப்பானில் - மறந்து போச்சா
அராச்சி செய்கிறோம் கேள்!
விசவாயுக் குண்டொன்று
மனுக் குலத்தை கொன்றொழிக்க
விஞ்ஞானம் மிக வளருது
மெய்ஞானம் பொய்க்குதாம்!

கடவுளை கும்பிடுவான் மூடன்
கத்துவான் பகுத்தறவு வாதி
கை தட்டுறான் இங்கு அப்பாவி
நமக்கும் மேலே ஓர் சக்தி
மறந்துபோச்சே நம்புத்தி
இடித்துச் சொல்ல வந்தாயோ?
இதற்கு அழிவு செய்தாயோ?

நீர்வை இரதி.

# யுத்தம் இல்லை என்பதற்காக ஆயுதம் வாங்காமல் இருக்கலாமா?

## என்கிறார் இராணுவத் தளபதி

(கொழும்பு)

நாட்டில் யுத்தம் இல்லை என்பதற்காக ஒரு நாட்டின் அரசாங்கம் ஆயுதக் கொள்ளவனவு செய்யாமல் இருக்கமுடியுமா என்று இராணுவத் தளபதி சாந்தகொட்டே கொட தெரிவித்துள்ளார்.

ஆயுதக் கொள்ளவனவிற்காக இராணுவத்தளபதி தலைமையிலான குழு ஈரானுக்குச் சென்றிருக்கிறது. இதுவிடயம் குறித்து இராணுவத் தளபதி கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு கூறியுள்ளார்.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கொட்டே கொட, கடற்படையின் கட்டளையிடும் அதிகாரி ரியர் அட்மிரல் மொஹான் விஜே விக்கிரம, விமானப்படையின் கட்டளையிடும் அதிகாரி ஏயார் வைஸ் மார்சல் லால் பெரேரா, குரூப் கப்டன் ரொஹான் பதிரன, பிரிகேடியர் நிமல் ஜயசூரிய, கமாண்டர் யஹட்டிகம, கமாண் டர் தர்மவீர, கேணல் ரம்புக் பொத்த, கேணல் ரோவேல் ஆகியோர் உட்படப் பத்து உயரதிகாரிகள் இந்தக் குழுவில் அடங்கியுள்ளனர்.

கடந்த வெள்ளி இரவு ஈரானுக்குப் பயணமான இவர்கள் அந்த நாட்டில் இருந்து பெருந்தொகையான இராணுவ உபகரணங்களைக் கொள்வனவு செய்யவுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

கடந்த நவம்பர் மாதம் ஈரானுக்கு விஜயம்செய்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அந்த நாட்டுத் தலைவர்களுடன் மேற்கொண்ட பேச்சுக்களின்போது இலங்கைக்கு நீண்டகாலக் கடன் அடிப்படையில் பெருந்தொகையான இராணுவத் தளபாடங்களை வழங்குவதற்கு அந்நாடு இணங்கியிருந்தது.

இராணுவத் தளபதி தலைமையில் ஈரானுக்கு சென்றுள்ள குழுவினர், ஐந்து நாள்கள் அங்கு தங்கியிருந்து கொள்வனவு நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் இராணுவ உபகரணங்களைப் பரிசீலனை செய்வர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத் தளபதி உட்பட முப்படைகளின் அதிகாரிகள் திடீரென ஈரானுக்குச் சென்று இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கான அவசரமும், அவசியமும் என்னவென்பது குறித்து இராணுவத் தளபதி தெரிவித்திருப்பதாவது,

இந்த விஜயம் திடீரென் திட்டமிடப்பட்டதல்ல. ஏற்கனவே இருந்த நிகழ்சி நிரலுக்கு அமையவே நாம ஈரானுக்கு பயணம் செய்கிறோம். நாம் யுத்தம் ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக யாரும் கருதவேண்டாம். இராணுவத்துக்கு அப்படியோர் எண்ணமில்லை. ஒரு நாட்டில் யுத்தம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இராணுவம் பலம்வாய்ந்ததாக இருக்க வேண்டும். யுத்தம் இல்லை என்பதற்காக இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்யாமல் இருக்க முடியுமா என்றும் அவர் கூறியிருக்கிறார்.

(த)



சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்விற்காக யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிதியத்திலிருந்து கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் மருத்துவத் தேவைக்காக ஐந்து இலட்சம் ரூபாவை மட்டு - அம்பாறை தளபதி கேணல் பானுவிடம் யாழ். மாவட்ட ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம் வழங்குவதையும், அருகில் யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சி.செம்மணன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் குடாநாட்டிற்குப் படையெடுப்பு

(துன்னாலை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடாநாட்டின் கரையோரப் பகுதிகளை வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் நேரடியாக வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர்.

இவர்கள் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுடன் கலந்துரையாடி சுனாமி அனர்த்தத்திற்கான உதவி வழங்கும் கருமபீடத்தின் செயற்பாடுகள் பற்றியும், தகவல்களைச் சேகரித்து வருகின்றனர்.

இலங்கையின் வடக்கு,கிழக்கு பகுதியில் ஏற்பட்ட அழிவுகளை அரசு பெரியளவில் எடுத்துக்காட்டாததால், இப்பகுதிகளின் சேத விபரங்களை நேரடியூக பார்வையிட்டு உண்மைநிலையை உலகிற்கு உணர்த்துவதே இந்த ஊடகவியலாளர்களின் வருகையின் நோக்கமாகும்.

அத்துடன், சர்வதேசத்தால் வழங்கப்படும் நிதியுதவிகள் உரியமுறையில் சென்றடைகின்றதா, என்பதையும் நேரடியாக பார்ப்பதற்காகவுமே இவ்வாறு வருகை தருகின்றனர்.

(ப-101,9)

# சுனாமி அனர்த்த நிவாரண பணிகளில் மேலும் இராணுவத் தலையீட்டை அதிகரிக்கத் திட்டம்

## சமூகத் தொண்டர் அமைப்புகள் அதிருப்தி

(கொழும்பு)

ஆழிப்பேரலையினால் பாதிப்புக்குள்ளாகி அகதிமுகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நிவாரணப் பணிகளுக்கு பொறுப்பாக இராணுவ அதிகாரியொருவர் நியமிக்கப்படவுள்ளார்.

இதற்கான தீர்மானத்தை நேற்று முன்தினமிரவு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமரதுங்க தலைமையில் கூடிய அனர்த்த முகாமைத்துவ தேசிய உயர்மட்டக்குழு எடுத்துள்ளது. நிவாரண நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக இந்த நியமனம் இடம்பெறுவதாக தேசியா அனர்த்த முகாமைத்துவ உயர்மட்டக்குழு தெரிவித்தாலும், இச்செயற்பாடு நிவாரணப் பணிகளில் இராணுவ தலையீட்டை மேலும் விரிவுபடுத்தும் செயலென அந்த பணியில் ஈடுபட்டுள்ள தொண்டர் அமைப்புகள் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளன.

ஏற்கனவே மாவட்ட ரீதியாக நிவாரணப் பணிகளை மேற்பார்வைசெய்ய இராணுவ அதிகாரிகள் இணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த நியமனத்திற்கு எதிராக விடுதலைப் புலிகள் உட்பட பல்வேறு தரப்பினர் எதிர்ப்பை தெரிவித்துள்ள நிலையில், அரசாங்கம் நடந்துகொள்கின்ற முறை குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் தமது கவலையை வெளியிட்டுள்ளார்கள். நேற்று முன்தினமிரவு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட மற்றுமொரு தீர்மானத்தின்படி,

தற்போது பாடசாலையில் தங்கியுள்ள அகதிகள், கூடாரங்கள் அமைக்கப்பட்டு வேறு இடங்களுக்குமாற்றப்படுவார்கள்.

பாதிககப்பட்ட ஒவ்வொருவருக்கும் வாராந்தம் ரூபா 375 பெறுமதியான உலர் உணவு மற்றும் ஏனைய பாவனைப் பொருட்கள் நிவாரணமாக வழங்கப்படவிருக்கின்றது எனவும் மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ப-4)

# இருவேறு விபத்துக்களில் ஒருவர் பலி; ஒருவர் படுகாயம்

(புத்தளம்)

முந்தல் பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற இரு விபத்துச் சம்பவங்களில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன், மேலும் ஒருவர் கடுமையான காயங்களுக்குள்ளான நிலையில் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக பாதையைக் கடக்க முயன்ற 67 வயதுடைய ஏ.எம்.கருணாநாயக்க மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் பிரஸ்தாப நபர் ஸ்தலத்திலேயே பலியானதாக முந்தல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை நேற்றுக் காலை இடம்பெற்ற மற்றுமோர் மோட்டார் சைக்கிள் விபத்தில் 54 வயதுடைய வை.அப்புஷாமி என்பவர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரு சம்பவங்களுடனும் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் செலுத்துநர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக முந்தல் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜித் பிரசன்ன தெரிவித்தார்.

(ற-15)

# மட்டு. முஸ்லிம் சமூகம் நிவாரண நிதியுதவி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு மட்டக்களப்பு நகர முஸ்லிம் வர்த்தக சமூகம் நேற்று ஒரு தொகை நிதியினை நிவாரணமாக வழங்கியது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைத்து வாகரைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தப்பணியில் உயிரிழப்புக்கள் ஏற்பட்ட குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டது.

அத்துடன் கதிரவெளி, ஊரியன் கட்டு, கண்டலடி, கட்டுவான் ஆகிய இடங்களில் தஞ்சமடைந்துள்ள குடும்பங்களுக்கும், உயிரிழந்தவர்களின் சமயச்சடங்குகளுக்குமெனவும் ஒரு தொகை நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

(ற-9)

## கும்பாபிஷேகம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதி ஸ்ரீமஹாகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் புனர்வர்த்தன உத்தம நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா திருக்குட திருமஞ்சன பெருஞ்சாந்திப் பெருவிழாவும், மகா கும்பாபிஷேகமும் வரும் 19, 22, 23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

(ப-130)

## கோரிக்கை

(துன்னாலை)

கரவெட்டி தபாலகம் நீண்ட காலமாக தனியார் கட்டடம் ஒன்றிலேயே இயங்கிவருகிறது. இதனால் இந்தத் தபாலகத்தின் மூலம் மக்களுக்கு திருப்திகரமான சேவைகளை வழங்கமுடியாத நிலைமை காணப்படுகின்றது.

எனவே இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

(ப-101)

## கலந்துரையாடல

சுனாமி கடற்பேரனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளநல சேவைகளை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 11 ஆம் திகதி சுனாமி அனர்த்த நிவாரண முகாமைத்துவ செயலணி அலுவலகத்தில் இடம்பெற்றன.

இதில் உளநல வைத்திய அதிகாரிகளும், சுகாதார தொண்டர்களும் கலந்துகொண்டனர்.

(ப-11)

# ஆழிப்பேரலையின் தாக்கங்களால் 50 ஆயிரம் மாணவர்கள் பாதிப்பு

## மட்டு.அம்பாறை மாவட்ட - கணிப்பீடுகள் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் ஆழிப்பேரலை காரணமாக சுமார் 50 ஆயிரம் மாணவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் 50 சதவீதமான மாணவர்கள் உயிரிழப்புக்களையும் உடைமை இழப்புக்களையும் நேரடியாக சந்தித்துள்ளதாக கல்வித் திணைக்கள மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இந்த மாணவர்களில் கூடுதலானவர்கள் அம்பாறை மாவட்டத்திலேயே பாதிக்கப்பட்டுள்ளார்கள். அதாவது கல்முனை கல்வி வலயத்தில் மட்டும் பாதிக்கப்பட்டுள்ள 12 ஆயிரம் மாணவர்களில் 7,800 மாணவர்கள் தமது இருப்பிடங்களை இழந்துள்ளார்கள்.

இதனைத் தவிர இந்த இரண்டு மாவட்டங்களிலும் 2 ஆயிரத்து 071 மாணவர்களும், 118 ஆசிரியர்களும் உயிரிழந்துள்ளதாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தொகையும் கல்முனை கல்விவலயத்திலேயே அதிகமாக உள்ளது.

**கல்முனை கல்வி வலயம்**

மாணவர்கள் - ஆயிரத்து 502, ஆசிரியர்கள் - 105 பேரும், சிற்றூழியர்கள் - 02 பேரும் பலியாகியிருக்கின்றனர்.

**சம்மாந்துறை கல்வி வலயம்**

2 மாணவர்களும், 2 ஆசிரியர்களும் உயிரிழந்துள்ளன.

**பொத்துவில் கல்வி வலயம்**

192 மாணவர்களும், 02 ஆசிரியர்களும் என மொத்தம் அம்பாறை மாவட்டத்தில் 1,696 மாணவர்களும், 109 ஆசிரியர்களும் உயி ரிழந்துள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 397 மாணவர்கள் 15 ஆசிரியர்கள், ஒரு கல்வி சாரா ஊழியர் என கல்வித்துறையில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

**மட்டக்களப்பு கல்வி வலயம்**

235 மாணவர்களும். 06 ஆசிரியர்களும், 01 சிற்றூழியர்

**கல்குடா கல்வி வலயம்**

125 மாணவர்களும் , 02 -ஆசிரியர்கள்

**பட்டிருப்பு கல்வி வலயம்**

மாணவர்கள் - 15

ஆசிரியர்கள் - 01

இதனைத் தவிர அம்பாறை மாவட்டத்தில் 40 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. இதில் 25 பாடசாலைகள் முழுமையாக சேதமடைந்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 38 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. இதில் 13 பாடசாலைகள் பகுதியாக சேதமடைந்துள்ளன.

முற்றாக சேதமடைந்துள்ள பாடசாலைகளை தற்காலிகமாக கொட்டகை அமைத்து இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளில் கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப-4)

அன்பின் வழியது உயர் நிலை அ.்.திலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. - குறள்

வலம்புரி

# உதவுகின்ற உறவுகளிடம் உருக்கமான வேண்டுகோள்

இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்பு, சொத்திழப்பு என்பனவற்றின் மத்தியில் மீண்டும் உயிர்ப்புபெற்றெழும் மனத்திடத்தை ஏற்படுத்தும் சூழ்நிலையை உருவாக்குவது நம் அனைவரதும் கடமை ஆகும்.

அதிலும் சுனாமியின் கொடூரத்துக்கு தங்கள் உறவுகளை கொடுத்துவிட்டு கண்ணீரும் கம்பலையுமாக இருக்கின்றவர்களை ஆற்றுப்படுத்தி, அவர்களுக்குத்துணையாக நாம் இருக்கின்றோம் என்ற உணர்வை ஏற்படுத்துவதும் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை ஏதோ ஒரு வழியில் ஈடுசெய்வதும் மனித நேயம் படைத்தவர்களின் கடமையாகும்.

அதேவேளை பெற்றோர்களை இழந்த பிள்ளைகளைப் பராமரிக்கும் பாரிய பொறுப்பும் நம்முன் உண்டென்பதை எவரும் மறந்துவிடலாகாது. குறிப்பாக உறவுகள் எவரும் இல்லாதவாறு தனித்துவிடப்பட்ட சிறுவர்களை பொறுப்பேற்றல், பராமரித்தல் என்ற விடயத்தில் ஓர் ஒழுங்கான செயலமைப்பும், வழி காட்டலும் அவசியமானதாகும்.

அத்துடன் சுனாமி என்ற இயற்கை அனர்த்தத்துடன் பாடசாலை இடைவிலகலின் அதிகரிப்பு ஏற்படக் கூடியவாய்ப்புக்கள் உண்டு. பாடசாலைகள் சேதமடைந்தமை, பாடசாலை புத்தகங்கள், சான்றிதழ்களை இழந்து போனமை, வீட்டின் உறவுகளை இழந்ததினால் ஏற்பட்ட வெறுப்பு, இடநகர்வு, பெற்றோரை இழந்து உறவுகளுடன் தங்கியிருத்தல் போன்ற பல்வேறு காரணங்களினால் பாடசாலைக்குச் செல்லாது இடைவிலகக்கூடிய சந்தர்ப்பங்கள் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிறையவே ஏற்பட வாய்ப்பு உண்டு.

இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடு இடைவழியில் நின்று போகலாம். அத்தகையதோர் நிலைமை ஏற்படுமாயின் எதிர்காலத்தில் அதன் தாக்கம் மிகப்பாரதூரமாக அமையும்.

எனவே, இது விடயத்தில் கல்வியாளர்கள், ஆசிரியர்கள், ஆற்றுப்படுத்துநர்கள், சமூக அமைப்புகள் கனதியான நடவடிக்கையினை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

பாடசாலைகளின் நிர்வாகங்கள் சுனாமி அனர்த்தத்தால் அனைத்தையும் இழந்துபோன மாணவர்களின் கல்விச்செயற்பாட்டுக்கு இடந்தரல்வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க இயற்கை ஏற்படுத்திய அனர்த்தத்திற்கான நிவாரணப்பணிகளில் அக்கறை கொண்டுள்ள சமூக ஆர்வலர்கள், அறப்பணியாளர்கள் சேதமடைந்த பாடசாலைகளை புனரமைப்பதற்கு முன்வரவேண்டும்.

இயற்கை அனர்த்தம் ஏற்படுத்திய அழிவுகண்டு துடித்துப்போன நல்லுள்ளங்கள் நிவாரணப்பணியில் ஈடுபட்ட செய்திகளும், வெளிநாடுகளில் வாழும் நம் உறவுகள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த வகையிலும் உதவி செய்ய வேண்டும் என்ற வேகமும் தமிழ்மக்களிடம் இருக்கக்கூடிய தர்மத்திற்குச் சான்றாதாரமாகும்.

அவ்வகையில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருக்கின்ற பரோபகாரிகள் பாதிக்கப்பட்ட மக்களின் விபரங்களை அறிந்து கொண்டு அவர்களுக்கான வீட்டுவசதிகள், தொழில்வாய்ப்புக்களை வழங்க முன்வரவேண்டும்.

# தத்தெடுப்புச் சட்டத்தால் அரசிற்கு தலையிடி! நீதி அமைச்சர் ஜோன் செனவிரட்ன விசனம்

(கொழும்பு)

**சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் தோன்றியுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கு துரித தீர்வுகாண நடவடிக்கை எடுப்பது அவசியம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கடந்த 13ஆம் திகதி நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

தேவை ஏற்படின் புதிய சட்ட பிரேரணைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து நீதியமைச்சர் ஜோன் செனவிரட்ன கருத்துத் தெரிவிக்கையில்,

சுனாமியால் பெற்றோரை இழந்த பிள்ளைகளை தத்தெடுப்பது மரண சான்றிதழ் வழங்குவது என்பன குறித்து புதிய சட்டங்களைக் கொண்டு வருவது குறித்த விடயங்களை ஆராய்ந்து அமைச்சரவைககு அறிக்கை சமர்ப்பிக்க அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சரவை உப குழு அடுத்த வாரம் கூடி ஆராயும் என்று தெரிவித்தார்.

சுனாமியினால் பெற்றோரை இழந்த பிள்ளைகளை தத்தெடுக்க முனைவது அரசாங்கத்திற்கு பெரும் தலையிடியாகவுள்ளது.

அத்துடன்,அமுலிலுள்ள தத்தெடுப்பு சட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளன. ஆகையால் தத்தெடுபபது தொடர்பாக புதிய சட்டம் கொண்டு வரப்படும் உத்தேச புதிய சட்டத்தின்படி தத்தெடுக்கபபடும் பிள்ளையின் முழுத் தேவைகளையும் தத்தெடுப்பவர் நிறைவேற்ற வேண் டும்.

தற்போது அமுலிலுள்ள சட்டத்தின் படி தத்தெடுக்கப்படும் பிள்ளைக்கு கல்வி வழங்கப்பட வேண்டுமா? என்பது குறித்து குறிப்பிடப்படவில்லை.

ஆனால் உத்தேச புதிய சட்டத்தின் படி தத்தெடுக கப்படும் பிள்ளைக்கு தத்தெடுப்பவர் கட்டாயம கல்வி வழங்க வேண்டும் அல்லது அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

தத்தெடுக்கப்பட்ட பிள்ளையின் நலனில் சிறுவர் நலன்காக்கும் உத்தியோகத்தர் அக்கறை காட்ட வேண் டும. தத்து வழங்கப்பட்டதும் அரசின் கடமை முடிந்து விட்டது. தத்தெடுப்போருக்கு சில வரையறைகள் வரை யறுக்கப்படும். கண்டபடி எவரும் தத்து கோர முடியாது என்றும் அமைச்சர் செனவிரட்ன தெரிவித்தார்.

பிள்ளைகளை தத்தெடுப்பது தொடர்பான புதிய சட் டப் பிரேரணை குறித்து கடந்த புதன்கிழமை நதியமைச்சின் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் யுனிசெப் நிறுவன பிரதிநிதிகள் உட் பட பலர் கலந்து கொண்டனர். தத்தெடுப்பதற்கான புதிய சட்ட பிரேரணைக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று மேற்படி கலந்துரையாடலில் தீர் மானிககப்பட்டது என்றும் தெரிவித்தார்.

(ப-9)

# வட-கிழக்கிற்கான மீள்கட்டுமாண உதவிகள் நேரடியாகவே வழங்கப்படுவது அவசியம்

## இதுவே சிறந்த வழி என்கிறார் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வட- கிழக்குப் பகுதிகளுக்கு அரசாங்க நிவாரண உதவி கள் உரியமுறையில் கிடைக்கவில்லை. தமிழ்ப் பகுதி களுககான நிவாரண மற்றும் மீள்கட்டுமாண உதவி கள் நேரடியாக வழங்கப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் நிதி உதவி வழங்கும் அமைப்புக்களின் பிரதி நிதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதி நிதி பீற்றர் ஹரோல்ட்,ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளான அலிசன்ரோ பியர், பிரைன் சுமித், சாவ தேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி இம் சிக்காட்டர், உலக வங்கியின் பிரதிநிதி நரேஸ் துரைச் சாமி மற்றும் ஜெய்க்கா நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியி லுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேசினர்.

இசசந்திப்பின் போதே தமிழ்ச்செல்வன் இக் கோரிக்கையினை விடுத்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசத்தில அரசாங்கத்தின் உதவிகள் உரிய முறையில் கிடைக்க விலலை. தொடர்ந் தும் தமிழர் தாயகப் பிரதேசம் புறக் கணிக் கப்பட்டே வருகினறது. எனவே நிவாரண உதவிகள் தமிழர் தாயகத்துக்கு கிடைப் பதனை அனைவரும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் தமிழ்ச் செல்வன் எடுத்துக்கூறியுள்ளார்.



சுனாமி அனர்த்தத்தினால் வட-கிழக்கில் ஏற்பட்ட இழப்புக்கள் மற்றும் பாதிப்புக்கள் குறித்து எடுத்துக் கூறிய தமிழ்ச்செல்வன், நிவாரண நிர்மாண உதவிகள் நேரடியாகக் கிடைப்பதை நிதி நிறுவனங்கள் உறுதி செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இசசந்திப்பினையடுத்து, நிதி நிறுவனங்களின் பிரதி நிதிகள் சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பகுதிக்கு விஜயம் செய்து பாதிப்புக்களை நேரில் பார் வையிட்டனர். அனர்த்தத்தினால் பாதிக்கபபடட மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களுக்கும் சென்று மக்களின் குறைகளையும் கேட்டறிந்துள்ளனர். (ப-9)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாதாந்தம் 5000 ரூபா உதவிக் கொடுப்பனவு!

## வர்த்தகருக்கு வங்கிக்கடன்; மாணவருக்கு உதவு பொருட்கள; மற்றும் பல

(கொழும்பு)

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாதம் 5 ஆயிரம் ரூபாவை உதவிக்கொடுப் பனவாக வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பிரதேச செயலாளர்களின் அத்தாட்சிக் கடிதத்தைச் சமர்ப்பித்து இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும் என நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்குப் புத்தகங்கள், அப்பியாசக் கொப் பிகள், பாதணிகள் மற்றும் சீருடைகள் என்பனவற்றை இலவசமாக வழங்குவதற்கும் அரசு தீர்மானிதது்ள்ளது.

இதேவேளை, சுனாமி பேரலையினால் சேதமடைந்த வர்த்தக நிலையங்களை மீண்டும் ஆரம்பித்து வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வர்த்தகர் ஒவ்வொருவருக்குமான தலா 5 மில்லியன் ரூபா வரை வங்கிக்கடன் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதல் வருடத்தில் இக் கடனுக்கு வட்டி அறவிடப் படமாட்டாது.

இரண்டாவது வருடத்தில் இருந்து 6 சதவீதவட்டி அறவிடப்படும்.

இதற்கிடையில், பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி ஆகியவற்றுக் கான நிலுவைப்பணத்தை அறவிடுவதை இரத்துச் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. (ரு-4)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**விதையிலிருந்து முளைத்தெழுந்து பூமியைப் பிளந்து கொண்டு செடி ஆகாயத்தை நோக்கி வளர்கிறதே அதன் காரணம் என்ன? சூரியன் பூமிக்கு அளிக்கின்ற கொடையின் பொருள் என்ன? உங்கள் வாழ்க்கை தான் என்ன? சுதந் திரத்திற்கான அதே போராட்டம் தான் சுதந்திரம் பெறுவதற்காக நாம் அறிவைத் தேடுகிறோம். சுதந்திரத்திற்கான ஒரு உச்சக் குரல் தான் நம் வாழ்க்கை.**

சுவாமி விவேகானந்தர்

# பேச்சென்ற பேச்சுக்கே...

கொண்டும் உள்ளனர்.

அம்பாறையில் பணியாற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழக ஊழியர்களை அகதிமுகாமை விட்டு வெளியேறுமாறும், அவர்கள் தங்கியிருந்த வீட்டு உரிமையாளர்களை மிரட்டி ஊழியர்களை வெளியேற்றவும் படையினர் முயன்றுள்ளனர்.

அரசின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவுக்கு மேற்படி சூழ்நிலைகள் தொடர்பான அடிப்படைகள் புரியாது இருக்கலாம். அல்லது அற்ப அரசின் இலாபங்களுக்காக கவனத்தில் எடுக்காமல் இருக்கலாம்.இதனால் பாரிய விளைவுகள் ஏற்பட இடமுண்டு.

கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு அரச மனிதாபிமான உதவிகளே தேவைப்படுகின்றது. தற்போது சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை.

கடந்த இருபது வருடங்களாக இடம்பெற்ற யுத்த அழிவுகளையும், கடல்அனர்த்த அழிவுகளையும் நிவர்த்திசெய்யும் அவசர மனிதாபிமான உதவிகளே தற்போது தேவை.

இந்த இழப்புக்களிலிருந்து மக்கள் மீளவேண்டும். அதன் பிறகே சமாதானப் பேச்சுப்பற்றி சிந்திக்கமுடியும் என்றும் புலித்தேவன் கூறியுள்ளார். (த-6)

## மன்னாரில்...

ஆயுதமுனையில் வெளியேற்றியுள்ளனர். இந்த அநாகரிகச் செயல் குறித்து மன்னார் அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன், போர் நிறுத்த கண்காணிப்பு குழுவின் கவனத்திற்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

படையினர் கனரக ஆயுத தளபாடங்களுடன் நிகழ்வு நடைபெற்ற இடங்களில் குவிக்கப்பட்டமை மக்களை உளரீதியாக பயமுறுத்தி, அவர்களது உணர்வுகளை உரிமைகளை மதிக்காத செயலை இட்டு நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் எமது அதிருப்தியையும் தெரிவிக்கின்றோம்.

நிகழ்வு நடைபெற இருந்த இடங்களில் படையினர் மக்களை அங்கிருந்து பலவந்தமாக விரட்டியதுடன், கண்ணீர் புகைக்குண்டுகளை வெடிக்கவைத்து மக்களை திகிலடையச்செய்து கலைத்துள்ளனர். இந்த அநாகரிகமான செயல் மக்கள் மீது திணிக்கப்பட்ட தமது போர் உபாயமாகும். இது ஒருபோர் நிறுத்த மீறலாகவே மக்கள் வெளிப்படுத்துகின்றனர் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

# மட்டக்களப்பில் சூட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்முனை வீதியில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். தனியார் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் பொன்னுத்தம்பி சகாயராஜ் (வயது 35) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

தனது நண்பர் ஒருவரைச் சந்தித்த பின் வீடு திரும்பிக்கொண்டிருக்கையிலேயே இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸார் விசாரணை மேற்கொள்கின்றனர். (ச)

## பாதிக்கப்பட்ட...

48 குடும்பங்களைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட மக்கள் நிர்க்கதியாகினர்.


பின்னர் தேவாலயம் பூட்டப்பட்டிருந்த பூட்டை உடைத்து இடம்பெயர்ந்த மக்கள் அங்கு தங்கினர். இதனால் ஆத்திரமுற்ற ஆலய நிர்வாகத்தினர் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கென உலர்உணவு வைக்கப்பட்டிருந்த அறையைப் பூட்டி திறப்பை எடுத்து சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.


இதேவேளை, அங்கு தங்கியிருந்த மக்களுக்கு நேற்றிரவு சமைத்த உணவு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-106,35)

## மோ.சைக்கிள்...

இராசையா சண்முகநாதன் (வயது 35) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இறந்தவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-51,39)





கிட்டு பூங்காவில் நேற்று நடைபெற்ற கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளினதும் 12 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகளிலிருந்து...
படங்கள்: ஜங்கரன்

# அரசு - புலிகள் திட்டம்...

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குத் தேவையான உதவிகள் பற்றிய மதிப்பீடுகளைப் பகிர்ந்து கொள்வதில் அக்கறை செலுத்தியிருந்தனர்.

நாங்கள் பாதிக்கப்பட்ட எல்லோரின் தேவைகளையும் ஆராய்ந்து வருகின்றோம். ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தோனேசியா, மாலைதீவு மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு 675 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க முடிவெடுத்திருக்கின்றது.

இத்தொகையில் 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நன்கொடைப் பணம். மிகுதி 175 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வேறு திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியாகும். இவற்றை இந்தப் பேரழிவு நிவாரணப் பணிகளுக்கு பயன்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட 175 மில்லியன் நிதியில் 50 டொலர் தொடக்கம் 60 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்படும். இந்த நிதியுதவிகள் வடக்குக் கிழக்கிற்கும் கிடைக்கவேண்டும் என்பதில் ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதியாகவுள்ளது.

இதனால் விடுதலைப் புலிகளினதும், அரசினதும் புனரமைப்புப் பணிகளுக்கான மதிப்பீடுகளை கூட்டாகப் பரிசீலிக்கவுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் இயக்குநர் மேலும் தெரிவித்துள்ளார். (த-04)

# கேணல் கிட்டுவின்...

யோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் பொதுமக்கள், மாணவர்கள், போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளினதும் நினைவு தினம் நேற்று நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள கிட்டு பூங்காவில் யாழ். நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் செழியன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் பொதுச்சுடரினை பொது அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் சிறில், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், யாழ். மாவட்ட மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன், யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் சிவகரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றினார். கேணல் கிட்டுவின் படத்திற்கு அவரது உறவினர் வேலுப்பிள்ளை இலங்காதேவி, லெப்.கேணல் குட்டிசிறியின் படத்திற்கு யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் குலேந்திரராசா, கப்டன் மலரவனின் நினைவுப் படத்திற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார், கப்டன் விஜயின் நினைவுப்படத்திற்கு அவரது தாயார் சரஸ்வதி கனகரட்ணமும், கப்டன் றொசானின் படத்திற்கு அவரது பெற்றோர் இரத்தினசிங்கம் தம்பதியினரும், லெப்ரினன்ட் தூயவனின் படத்திறகு அவரது தாயார் மகாலிங்கம் சற்குணேஸ்வரியும், லெப்ரினன்ட் அமுதனின் படத்திற்குப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், லெப்ரினன்ட் நல்லவனின் படத்திற்கு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய ஊடகப் பேச்சாளர் கனகலிங்கம் ஆகியோர் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து நினைவுரைகளை பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார் ஆகியோர் நிகழ்த்தினர். (ச-19,35,101)

# புலிகளின் விமான....

ஒருவர் ஓட்டக்கூடிய ஆறு ஆசனங்கள் கொண்ட சிறியரக விமானம் தரித்து நின்றதை உளவு விமானம் படம் பிடித்துள்ளதை அடுத்து படையினர் அதனை மீண்டும் அடுத்த நாள் வியாழக்கிழமை வன்னி வான்பரப்புக்கு மேலாக பறக்கவிட்டுள்ளனர்.

அப்போது அதேரகமான ஆனால் உருவத்தில் வேறுபட்ட இன்னொரு விமானமும் அங்கு தரித்து நின்றதை உளவு விமானம் படம்பிடித்துள்ளதாக விமானப் படையினர் தெரிவித்துள்ளனர்.

புலிகளிடம் விமானம் உள்ள விவகாரம் தற்போது பாதுகாப்பு அமைச்சுக்கு உறுதியாகிவிட்டதால் இதுகுறித்து என்ன நடவடிக்கை என்பது தொடர்பில் தீவிரமாக இறங்கியுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிபுரிய இலங்கையில் நிலைகொண்டுள்ள வெளிநாட்டு இராணுவத்தினருக்கும் இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இராணுவ வட்டாரங்களிலிருந்து தகவல் கசிந்துள்ளது. (த)















# மரண அறிவித்தல்கள்

## கதிர்காமநாதன் ஆனந்தகுமார் (சூட்டி)

(டினு ஹயஸ் உரிமையாளர் வெள்ளவத்தை)

புத்தூர் சிறுப்பிட்டி வடக்கை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள் ளவத்தையை வசிப்பிடமாகவும்கொண்ட கதிர்காமநாதன் ஆனந்தகுமார் நேற்று அகாலமரணமானார்.

இவர் கதிர்காமநாதன் நாகேஸ்வரியின் அன்புமகனும் கிளியின் அன்புக்கணவரும் டினு, ஜஸ்வினியா ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் மரணச்சடங்கு புத்தூர் சிறுப்பிட்டி வடக்கில் நடைபெறும். இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ஈஸ்வரம்பிள்ளை
(மாமா)

வட்டு கிழக்கு,
வட்டுக்கோட்டை.

(c-1009)

## சின்னையா குஞ்சுப்பிள்ளை

கட்டப்பிராயை பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும கொண்ட சின்னையா குஞ்சுப்பிள்ளை 16.01.2005 ஞாயிற்றுக்கிழமை நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், நாகம்மா, கனகமணி, முத்துலிங்கம், சத்தியபாலதேவியின் (லண்டன்) அன்புத்தாயாரும் கந்தையா, நல்லையா, நாகேஸ்வரி, பரதன் (லண்டன்) ஆகியோரின மாமியாரும் சிவனேஸ்வரன் (நீர்வேலி ப.நோ.கூ சங்கம்) ஜெகதீஸ்வரன் (பிரான்ஸ்) ராஜதீபன், ஷர்மிலன், ஷர்மிலா, டசிதா, டனிஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.01.2005 இன்று பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக நாவற்குழி பினமுருங்கை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.கனகமணி
(மகள்)

(9226)

# பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

✧ **பத்திரிகை விநியோகஸ்தர்கள்**

(சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவரும், இரவில் நிறுவனத்தில் தங்கியிருப்பதும் அவசியமானதாகும்.)

✧ **பாதுகாப்பு உத்தியோகத்தர்**

(ஆண், பெண் இருபாலாரும்)

✧ **சிற்றூழியர்கள்**

(ஆண்கள் - பகல், இரவுக் கடமை)

தகுதியானவர்கள் 18.01.2005 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்

ஆளணி முகாமையாளர்
(வலம்புரி)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.